
சிவமயம்

# குமரகுருபரன்



மலர் 11 1960-௵ ஆனித் திங்கள் இதழ் 6

## ஆசிரியர் குழு

1. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A. B. O. L.,
பிரின்ஸிபால், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.

2. திரு. கே. சிவராமன் அவர்கள் M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்
காசிச் சர்வகலாசாலை, காசி.

3. ராவ்சாஹிப், வித்துவான். திரு. கு. அருணாசலக் கவுண்டர்
அவர்கள், தலைமைத் தமிழ் விரிவுரையாளர், ம. தி. தா. இந்துக்
கல்லூரி, திருநெல்வேலி.

4. திரு. ஆ. சி. ஷண்முகநயினார் பிள்ளை அவர்கள் B. A., B. L.,
வழக்கறிஞர், தென்காசி.

5. திரு. டி. எச். விவேகானந்தம் பிள்ளை அவர்கள் B. A., L. T.,
அசிஸ்டென்ட் கமிஷனர், இந்து அறநிலைய இலாகா,
தஞ்சாவூர் (மேற்கு)

6. திரு. ம. ரா. சண்முகசுந்தரம் பிள்ளை அவர்கள் B A., B. L.,
இந்து சமய அறநிலைய உதவி ஆணையர் (ஒய்வு),
'வள்ளுவர் குறடு" மதுரை.

---

T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L.,
நிர்வாக ஆசிரியர்.

## உள்ளுறை

பக்கம்

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை




| மலர் 11 | 1960-ஆு ஆனித் திங்கள் | இதழ் 6 |
|---|---|---|

# சிதம்பரச் செய்யுட் கோவை

தருமையாதீனம் முதுபெரும்புலவர்,

**திரு. மாணிக்கவாசக அடிகள்**

(முத்து. சு.)

(கட்டுரை 35)

"மருட்டுயர் தீரவன் றர்ச்சித்த மாணிமார்க் கண்டேயர்க்கா
யிருட்டிய மேனி வளைவா ளெயிற்றெரி போலுங்குஞ்சிச்
சுருட்டிய நாவலவெங் கூற்றம் பதைப்ப வுதைத்துங்கனே
யுருட்டிய சேவடி யான்கட வூருறை யுத்தமனே."

இது திருநாவுக்கரசு நாயனர் திருக்கடவூரில் அருளிய திருப்பாடல்களுள் ஒன்று. திருநள்ளாற்றிலே எழுந்தருளித் திருஞான சம்பந்தப் பெருமானர்,

"பாலனடி பேணஅவ னுருயிர் குறைக்குங்
காலனுடல் மாளமுன் உதைத்தஅரன் ஊராம்
கோலமலர் நீர்க்குடம் எடுத்து மறையாளர்
நாலின்வழி நின்றுதொழில் பேணியநள் ளாறே."

என்று பாடியருளினர்.

சுந்தரமூர்த்தி நாயனர் திருப்புன்கூரிலே திருவடியை அடைந்து வழிபட்டபோது,

"அந்த ணாளன் உன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்றன் ஆருயி ரதனை
வவ்வி னாய்க்குன்றன் வண்மைகண் டடியேன்
எந்தை நீ எனை நமன்தமர் நலியின்
இவன்மற் றென்னடி யான்என விலக்குஞ்
சிந்தை யால்வந்துன் திருவடி அடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே."

என்று போற்றியருளினர்.

இம் மூன்று திருப்பாடலிலும் உள்ள சிவசரிதம் இங்கு உள்ளத்தே கொள்ளப்படல் வேண்டும். இவற்றுள் கால சங்காரம் புரிந்த (கடவுளது) உண்மை கூறப்பட்டது. மார்க் கண்டேயர்க்காகக் காலனை மாய்த்த சிவபுராணம் இது. 'கன்றிய காலனை அடியவர்க்கா(க)க் காலாற் கடிந்தான்' எனின், கடிந்த கடவுட்கே அடிமையாதல் ஆன்மாக்களின் கடன். இவ்வாய்மையை எவ்வளவு முயன்று செவியிலேற்றினும்,

"செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்று
பத்திசெய் மனப்பாறை கட்கு ஏறுமோ"?

ஏறுது. ஏறுதது எது? மார்க்கண்டேய சரிதமோ எமனை யுதைத்த சோதியோ? திருநாவுக்கரசர் திருவுள்ளத்தை அறிந்து முடிவு செய்து கொள்க. அப்பர் சுவாமிகள்,

"அத்தன்என்று அரியோடு பிரமனும்
துத்தியம் செயநின்ற நற்சோதியே"

என்றதால், சோதி ஏறுமோ எனல் வேண்டும் ஆயினும், இங்கு உரைப்போக்கு நோக்கின் ஏறுவது சிவசரிதவாய்மை.

மிருகண்டு முனிவர் சிவபிரானைப் பூசித்தார். அப்பூசைப் பயனாகக் கலைமலிந்த சீர்மிக்க மார்க்கண்டேயரைப் புதல்வராகப் பெற்றார். அப்பேற்றால் உலகமெல்லாம் புகழ் மிக்கவராய்ச் சத்தியலோகத்திலே பெருமகிழ்வுடன் வாழ்கின்றார். அவர் சிவபெருமானிடத்தில் வரம் வேண்டிப் பெற்றபோது பதினாறு யாண்டு வரை உள்ளதொரு பிள்ளைவரமே பெற்றார். குண விசேடம் ஒன்றே அப்போதைய குறிக்கோள். பதினாறாண்டு முற்றியதும் இறவாமையே எண்ணம் ஆயிற்று. கொள்கை வேறுபாட்டிற்குக் காலவேறுபாடும் காரணம் ஆதல் இதனாலும் விளங்கும். இக்காலத்தில் திருக்கோயில்களின் உள்ளே மலவறை அமைக்குங் கொள்கையை அதிகாரிகளும் ஆதரிக் கின்றார்கள். இதுகால வேறுபாட்டால்தானே. காலன்வேறு படுதலும் காலவேறுபாடே. அதே காலன் இப்போது இருப்பின் இவர்கள் காலம் போக்குவார்களோ? இவன் கையூட்டு வாங்கிக் கொண்டு காலந்தள்ளுங் காலன் போலும்.

மார்க்கண்டேயர்க்கு ஆயுட் காலம் பூரணம் அடைய இரண்டே நாள் இருக்கின்றன. தாயும் தாதையும் நோயும் வாதையும் உற்று, பின்வரும் துன்பத்தை முன்வரச் செய்து கொண்டு அழுகின்றனர். அந்தகன் அழுதாலும் போகான் என்று அறியாதவர் அல்லர் அவ்விருவரும். சிவபூஜைப் பயன் சித்திக்கும் என்பதிலே மிக்கவுறுதி யுடையவர்கள். அப்படி யிருந்தும் மனித சுபாவம் புத்திர வாஞ்சை முதலியவை இயற்கை அன்பினைச் செயற்கைத் துன்பினால் மூடச்செய்கின்றன. அம்மையும் அப்பனும் அழுதல் தம்பொருட்டே என்பதை அறிந் தார் மார்க்கண்டேயர். அவர் அறிவுக்கு உலகப் பொருள்களுள் ஒன்றும் பொருளாயில்லை. சிவபெருமான் திருவடி வழிபாடே பொருளாயிருந்தமை உணர்வுடையோர் எவரும் அறிந்த உண்மை. சிவபூசையை ஒன்றியிருந்து நினைந்து செய்து கொண்டுவந்தார். அப்பொழுது இயமன் உரிய காலத்தினைப் போற்றி வந்தான். காலதாமதம் புரியாதவன் அவன்ஒருவனே. அதனாலும் அவன் காலன் ஆனான்.

ஐதராபாத்தில் ஒருவண்டிக்காரன் குறித்த நேரத்தில் புகைவண்டி நிலயத்திற் சேர்த்துப் பயணம் கெடாமல் செய்வ தாக உறுதிகூறி ஏற்றிக்கொண்டு சென்றான். புகைவண்டியும் அவன் வண்டியும் முறையே நீக்கமும் சேர்வும் ஒருசேர உற்றன. உன் உறுதிமொழி இதுதானே என்று கேட்டதற்கு இது நேற்று வர வேண்டிய வண்டி இப்போது வரவேண்டியது இனிவரும். இங்கேயே இருங்கள். வந்தால் ஏறிப் போங்கள் என்று கூறிக் கூலியைக் கவர்ந்து மீண்டான். இதுபோலப் பல (காலதாம தத்தை விளக்கும்) நிகழ்ச்சிகள் உள. இவ்வாறெல்லாம் நிகழாத இடம் இயமனிடமே.

மார்க்கண்டேயரை அணுகிய இயமன் நயமொழிகளால் தன்னுலகிற்கு எழுந்தருள வேண்டினான். அம்முனிவர் அவனை அணுவளவும் பொருளாக்கொள்ளாமல் ஆண்டவன் அடிமலர் வழிபாட்டிலேயே அகத்தை வைத்துப் பூரண சுகத்தை எய்தி யிருந்தார். அட்டகாசம், அதட்டல், அச்சம் விளைத்தல் எல்லாம் இயமனுக்கு மிச்சம் ஆயின. அவற்றால் அங்கு யாதும் பயன் இல்லை. இங்கே ஓர் உண்மை எல்லார்க்கும் நினைவில் வரல் வேண் டும். தேவாரம் பாடுவோருட் பலர், முற்குறித்த 'அந்தணாளன்' எனத் தொடங்கும் சுந்தரப்பெருமாள் திருப்பாடலைப் பாடுங்கால் 'காரணமாக வந்த காலன்றன்' என்ற தொடரை மடக்கி மடக்கிப் பாடக் கேட்டிருக்கலாம். அது பொருத்தமாகத்தான் இருக்கிறது இங்கு. கொல்ல வந்தவன் செயல், மார்க்கண்டேயர் இடும் பூக்கள் இறைவன் திருவடியிற் செல்ல வந்ததாக வலிமை யற்றுப் போனதால், 'காப்பது காரணமாக வந்த காலன்' ஆனான் போலும். சுந்தர மூர்த்திகள் 'காரணமாக வவ்வினாய்' என்று திருவுளங்கொண்டு பாடி யருளினார். அவர்க்குக், காரணம் காப்பு; காரியம் வவ்வல், ஓதுவார்கட்குக் காரணம் வேறுபடவில்லை, அதே காப்புத்தான். ஆனால் வருதல் காரிய மாயிற்று. காலன் மார்க்கண்டேயரைக் காப்பது காரணமாக வந்தானேல், இவ்வளவு வருத்தம் தாய் தந்தையர்க்கும் ஒன்றிய வழிபாடு மகனார்க்கும் ஏன்? 'காரணமாக வவ்வினாய்க்கு' என்னும் இயைபு தோன்றும் வண்ணம் நிறுத்த வேண்டிய இடத்தில், பண்ணும் இசையும் தாளமும் கெடாமல் கேட்பார்க்கு

இன்பம் விளையப் பாடுதல் ஓதுவார்கள் கடனுகும். சிலர் பொருளறிந்து பாடி இன்புறுத்துகின்றனர்.

இயமன் செய்த அட்டகாசங்களையெல்லாம் அலட்சியமும் செய்யாது இலட்சியமும் செய்யாது (எண்ணத்திலே சாராது தள்ளி) இலிங்க ரூபசிவனைத் தழுவிக்கொண்டார் மார்க்கண் டேயர். இயமன் கயிற்ருற்கட்டி ஈர்க்கமுயன்று வேர்க்க லானுன். இதைப் பார்க்கமுடியுமா பரமசிவனுக்கு ? திருப் பாதத்தைத் தீர்க்கமாக்கினுன்; இயமனுயிரைத் தீர்க்கலானுன். அதையே, வந்த காலன்றன் ஆருயிரதனை அடைக்கலம் புகுந்த அந்தணுளனைக் காப்பது காரணமாக வவ்விணுய் என்று வன் ரெண்டர் பாடியருளினுர்.

சிவபிரான் தன்னை மார்க்கண்டேயர் பூசித்ததற்கு மகிழ்ந் தார். அவர் துதிகளைக் கேட்டு உளம் பூரித்தார். என்றும் பதினுறு வயதுடன் இருக்க வரம் அளித்தார். மற்றும் வேண் டும் வரம் அனைத்தும் அருள் செய்தார்.

கொடுங்கூற்று வேலேந்தி எதிர்ப்பட்டால் அஞ்சல் என்று அபயம் அளித்துக் காத்தருள வல்லான் சிவபிரான் ஒருவனே; அவனே பிறப் பிறப் பில்லான்.

‘பிறப்பாதியில்லான் பிறப்பார் பிறப்புச்
செறப்பாதியந்தஞ் செலச் செய்யுந்தேசன்
சிறப்பாடுடையார் திருப்பறியலூரில்
விறற்பாரிடம் சூழ் வீரட்டத்தானே’

‘பெருகாமே வெள்ளந் தவிர்த்தார் போலும்
பிறப்பிடும்பை சாக்கா டொன்றில்லார் போலும்’

என்று திருமுறைகள் கூறியவாறு ‘பிறவாயாக்கைப் பெரி யோன்’ ஒருவனைப் போற்றினுல் அன்றி இறவாமலும் பிறவாம லும் வாழும் பேரின்ப வாழ்க்கை கிடைக்காது. எவனை வழி பட்டாலும் இறப்பும் நீங்காது. பிறப்பும் ஓயாது. சிவனை வழிபட்டால்தான் பிறப் பிறப்பில்லாப் பேரானந்தப் பெருநலம் பெறலாம். தில்லைச் சிதம்பர தரிசனம் பிறவாமையைத்

தருவதே. வேண்டுவார் வேண்டுவதே ஈதல் யாண்டும்பொது. அதனால்தான், அப்பர் சுவாமிகள் பிறவியைத் தீர்க்கும் தரிசனத்தைப் பெற்றுக்கொண்டே இன்புற்றிருக்கப் 'பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே' என்று பாடி வேண்டினார். அப்பொன்மன்ருடியின் நன்மலர்க்கழலை வணங்கி வழிபட்டால், துஞ்சும் உயிர்களை நஞ்சு உண்டு எஞ்சும்படி காத்த எழுத் தஞ்சுருவினன் இறவாவரம் ஈந்தருள்வான். 'ஈறிலாதவன் ஈசன் ஒருவனே' அவனை வழிபட்டால் அன்றி ஈறு ஈறு எய்தாது. 'பேயர் பேய்முலையுண்டு உயிர்போக்கிய மாயன் மாயத்துட்பட்ட மனத்தர், தாயினும் நல்ல சங்கரனுக்கு அன்பராய உள்ளத்தமுது அருந்தப் பெறுர்.' இது திருநாவுக்கரசர் அருண்மொழி. அவர்போலத் தேவதேவன் சிவன் பெருந்தன்மையை வெளியிட்டார் யார்? அதை நம் ஆசிரியர் குமரகுருபரர் வெளியிடும் வண்ணம் இது:-

'வெஞ்சமன் அஞ்ச வேலொ டெதிர்ந்தான் நமரங்காள்
அஞ்சல் எனுஞ்சொல் ஆர்சொல வல்லார் நமரங்காள்
மஞ்சிவர் இஞ்சி மன்றம் இறைஞ்சீர் நமரங்காள்
நஞ்சம் அயின்ருர் நல்குவர் மாதோ நமரங்காள்'

[குறிப்பு:— நஞ்சவேல் எனலும் பொருந்தும் ஆயினும் 'அஞ்சல்' என அடுத்துவருதல் நோக்கின் அஞ்ச எனலே சிறந்தது. மஞ்சு – கருமுகில். மை – கருமை. மைத்து – மைந்து– மந்து – மஞ்சு என்று திரிதல் இயல்பு. நீந்தினன் – நீஞ்சினன், இஞ்சி – மதில், மன்றம் – பொன்னம்பலம். நல்குவர் – அபயம் கொடுத்தருள்வர்; அஞ்சல் எனுஞ் சொல் நல்குவர். உயிர் அஞ்ச வருவான் சமன், வேலொடு வருவான், அவன் வரும்போது அஞ்சாதே என்ற சொல்லை நல்குவன் நஞ்சம் உண்ட அஞ்சா நெஞ்சன். 'நமரங்காள்' என்பது ஒன்பதாம் பாடலில் அறியப்பட்டதே.]

(தொடரும்)

# தமிழ்த் தேன்*

கல்வெட்டு ஆராய்ச்சிக் கலைஞர்.
வித்துவான் திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள்,
Research Assistant for Inscriptions,
Dravidian Philology Department, Annamalai University.

முன்னுரை :- அருமைமிக்க தலைவர் அவர்களே! தவ நெறிச் செல்வராய் இங்கு எழுந்தருளியிருக்கும் அடிகள் மார்களே! மாணவர்மன்ற ஆண்டு விழாவைச் சிறப்பிக்க இங்குக் குழுமியிருக்கும் பெரியோர்களே! உங்கள் அனைவர்க்கும் என்வணக்கம் உரியதாகும்.

திருமழபாடி என்னும் இவ்வூர், சைவ சமயகுரவரால் பாடப் பெற்ற பெருமையும் பழமையும் வாய்ந்தது. மழவர்பாடி என்பதன் சிதைவே மழபாடி ஆயிற்று. மழவர் பாசறை செய்து கொண்டு இருந்த இடமாதல் பற்றி இஃது இப்பெயர் பெற்றது. மழவர் என்பார் ஒருவகைக் குதிரைவீரர் ஆவர். இவர்களின் தலைவர் மழவராயர், அல்லது மழவர்கோ என்று அழைக்கப் பெறுவர். இவர் சேரர் குலத்தினர் இம்மழவராயர் ஆண்ட நாடு மழநாடாகும். திருஞானசம்பந்த நாயனார் புராணத்தில் கூறப்பெறும் கொல்லிமழவன் இம்மழநாட்டின் ஒரு பகுதியை ஆண்டவன் ஆவன். ஆனாய நாயனார் புராணத் தினால் இம்மழநாடு மேல்மழநாடு, கீழ்மழநாடு என்னும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்த செய்தி அறியக்கிடக்கின்றது. பாடல்பெற்ற திருப்பாச் சிலாச்சிராமக் கோயிலில் உள்ள முதலாம் இராசராச சோழனின் பதின்மூன்றாம் ஆண்டுக் கல்

---

* இது, திருமழபாடி கழக உயர்நிலைப்பள்ளி மாணவர்மன்ற ஆண்டு விழாவில் வித்துவான். உயர்திரு. கு. விசுவநாதன் அவர்கள் தலைமையில் 26-3-1960 இல் நிகழ்த்திய சொற்பெருக்கு.

வெட்டு மழநாடாகிய இராஜாசரிய வளநாட்டைக் குறிப்பிடு கின்றது. எனவே மழநாடு கி. பி. 998 இல் இராஜாசரிய வளநாடு என்னும் பெயரைப் பெற்றது. "மேல்மழநாடு என்னும் நீர்நாடு" என்ற சேக்கிழார் வாக்கினால் இதன் நீர்வளம் புலனாகும். இம்மழபாடிக்கு அண்மையில் இருக்கும் அரண்மனைக் குறிச்சி என்னும் ஊர் முற்காலத்தில் மழவரசர்கள் இருந்த அரண் மனையைக் குறிப்பதாகும். இக்குறிச்சிக்கு அருகில் உள்ள பாலைபாடி (பாலையபாடி) என்னும் ஊர், பாலைபாடிய பெருங் கடுங்கோ என்னும் புலவர் பெருமானுக்கு முற்றூட்டாகக் கொடுக்கப்பெற்ற ஊராக இருக்கலாமா என்று முடிவு செய்ய வேண்டும்.

இத்திருமழபாடிக்கு மேற்கில் உள்ள கண்டராதித்த சதுர் வேதிமங்கலம், (கண்டராச்சியம்) கோயில் திருவிசைப்பாப் பதிகம் பாடிய கண்டராதித்த சோழதேவர் பெயரால் நிறுவப் பெற்ற ஊராகும். இதற்கு அண்மையில் உள்ள குலமாணிக்கம் செம்பியக்குடி இக்கண்டராதித்த சோழரது தேவியார் ஆகிய செம்பியன் மாதேவியாரின் திருப்பெயரால் வைக்கப் பெற்ற ஊராகும். இச்செம்பியன் மாதேவியார், திருவையாறு கல் வெட்டொன்றில் "குலமாணிக்கமாகிய நம்பிராட்டியார் செம்-பியன் மாதேவியார்" என்று பாராட்டப்படுகின்றனர். செம்-பியன் மாதேவி என்பது இக்காலம் செம்பியக்குடி என்று வழங் கப்படுகிறது.

எனவே வரலாற்றுச் சிறப்புடைய இவ்வூரில் மழபாடியுள் மாணிக்கத்தைக்கண்டு வணங்கவும், கண்டார் மனத்தைக் கவரச் செய்யும் இந்த உயர்நிலைப்பள்ளியின் கட்டிடத்தைப் பெரும் பொருட் செலவில் இலவசமாகக் கட்டியுதவியவரும், அருள்ஒழுகு கண்ணும், அறங்கிடக்கும் நெஞ்சும் உடையவரும் இவ்வூர்ப் பெரிய மடாலயத்தின் அதிபரும் ஆகிய அடிகளாரைக் கண்டு வணங்கி, அவர்கள் திருக்கையால் திருநீறுவாங்கி அணியும் பேற்றைப் பெறவும் செய்த இந்த மாணவர்மன்றத் தலைவர்க்கும் செயலாளர்க்கும் என்நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவை அனைத்தையும்விட இங்கு மாணவர்கள் நிகழ்த்திய கலைநிகழ்ச்சிகள்எனக்கு மிக்க மகிழ்ச்சியைஅளிப்பன

வாயின. இவைகளுக்குக் காரணம் தலைமை ஆசிரியரை உள்ளிட்ட ஆசிரியர் அனைவரும் ஒரு மகிழ்ச்சியுள்ள குடும்பமாக (A happy family) இருப்பதேயாகும். இனி என் சொற்பொழிவைத் தொடங்குகின்றேன்.

தமிழ் :- இனிமை. (ஓசையினிமை, மனத்துக்கு இனிமை) என்னும் பொருள் பயந்து இன்னோசையுடன் செவியாற் சுவைக்கப்பட்டு, உட்புகுந்து மனத்தாற் சுவைத்துத் திளைக்கப்படுவது.

தேன் :- நாவாற் சுவைக்கப்பட்டு மருந்தாகவும், உணவாகவும் பயன்பட்டுக் குடரின்கண் சென்று குருதியாகப் பரவுவது.

வெவ்வேறு இயல்பினதாகிய இவ்விருவகைப் பொருளையும் ஒன்றெனை எவ்வாறு கூறுவது? இதனை அலங்கார நூலார் உருவகத்தின்பாற் படுத்துக் கூறுவர். நாவின் சுவைவேறு, செவியின் சுவைவேறு. இவ்விருவேறு சுவைப்பொருளையும் ஒன்றென்ப தெங்ஙனம் என்று மயங்கித்தளர்வேனுக்கு ஓர் ஊன்றுகோல் கிடைத்தது. அது வள்ளுவர் காட்டியது.

இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
யொழுக்க முடையார்வாய்ச் சொல் (திருக்குறள் 415)

என்கிறார்.

நமது பெருந்தகையார், அவரைச் சேக்கிழார் "அச்சிறிய பெருந்தகையார்" (சம்பந்தர்புராணம்) என்பர். அப்பெருந்தகையாராகிய சம்பந்தப்பெருமான் இவ்விருவேறு சுவைப் பொருளையும் ஒன்றாகக் காட்டினர். அதன் விளக்கம்:-

அவர் உண்டது ஞானப்பால். நாவின் சுவையமுதம். அந்த நாவின் சுவையையே எமது செவியின் சுவையமுதமாய் மாற்றிவார்த்தார் என்னும் அரிய செயல்

பூவான் மலிமணிநீர்ப் பொய்கைக் கரையினியற்
பாவான் மொழிஞானப் பாலுண்டு — நாவான்
மறித்தெஞ் செவியமுதாய் வார்த்தபிரான் றண்டை
வெறித்தண் கமலமே வீடு

என்னும் நால்வர் நான்மணி மாலையாலும் அறிவது. ஞானமே திருவுருவாகிய அவர்க்காயின் இது ஆகும். எம்போல்வார்க்கு ஈது இயல்வதோ?

கற்றுவல்ல புலவர் பெருமக்களுக்காயின் இதுபோல் ஒன்றனை மற்ருென்ருக மாற்றிக் கூறும் வன்மையுண்டு.

1. அவர்கடலை மலையாகக் கூறுவர்.

நகரைக் கடலாகக் கூறுவர்
இன்னும் அவர்கள்,

2. இயங்கு திணையை (சஞ்சரிக்கும் பொருளை) நிலத்திணை யாகவும், நிலைத் திணையை இயங்கு திணையாகவும் கூறுவர்.

3. இயற்கை நிகழ்ச்சியைச் செயற்கை நிகழ்ச்சியாகவும், செயற்கை நிகழ்ச்சியை இயற்கை நிகழ்ச்சியாகவும் கூறுவர்.

4. இயற்கைப் பொருளைச் செயற்கைப் பொருளாகவும் கூறுவர்.

இவற்றுக்கு ஒவ்வோர் உதாரணம் காட்டாவிடின் இவ்வுரை குன்றக் கூறலாய் முடியுமாகலின் அதுவும் காட்டி மேற் செல்வேன்.

எங்கே சொற்பொழிவாளர் தாண்டிக் குதிக்கிருர்? "மற் ருென்று விரித்தல்" என்னும் குற்றத்திற்கு இலக்கு ஆகின்ருர் என்று என்மேற் குற்றஞ்சாட்டாதீர்கள். இவ்வாறு கூறவேண்டு மென்பது இலக்கண விதி. எங்கு எனின்?

"....ஆண்டைக் கின்றியமையா யாவையும் விளங்கத்
தன்னுரையானும் பிறர் நூலானும் ஐயமகலவைங்
காண்டிகை யுறுப்பொடு மெய்யினை யெஞ்சா
திசைப்பது விருத்தி"

(என்பது நன்னூல் சூத்திரம் 23)

இங்குக் காட்டும் உதாரணச் செய்யுளினும் தமிழ்த்தேன் சொட்டுவதைக் காண்பீர்கள்.

1. கடலை மலையாகக் கூறுவது:—

திருமால் பள்ளியறையாகிய பாற்கடல்தான் சிவபெருமான் எழுந்தருளும் திருக்கைலை யாயிற்று என்பர் சிவப்பிரகாசர்.

கண்பிசைந் தொருசே யின்னுங் கலுழினுந்
 தனைக்கொ டுப்பன்
மண்பிசைந் துண்ட மாயன் மறுத்திட
 வல்ல னல்லன்
நண்பிசைந் திறைவ னுக்கே நாமிடம்
 ஆவ மென்று
பண்பிசைந் தலைதி ரண்ட பரிசில்நின்
 றிடுமக் குன்றம்

என்னும் பிரபுலிங்கலீலைப் பாடலாம். அதன் கருத்து:—

முன்பு உபமன்னிய முனிவருக்குத் தில்லையில் அளித்தது போல், இன்னும் யாதானும் ஒரு குழந்தை யழுததானல் அதற்கும் நம்மைக் கொடுத்துக்கொண்டே யிருப்பான். எம் படுக்கையாகிய பாற்கடலை நீர் எப்படிக் கொடுக்கலாம் என்று மறுத்திடத் திருமால் வலியரல்லர். ஆதலால் அந்தச் சிவபெருமானுக்கே நாம் இடமாவோமென்று பாற்கடலே திருக்கைலை மலை யாயிற்று என்பதாம். இங்குக்கடலை மலையாக்கினர். இனி ஒரு நகரத்தைக் கடலாக மாற்றிக் கூறுவர் ஒரு புலவர்.

அது:—

அந்நகரிலுள்ள வீரர் – சுறு மீன்கள்; மாடங்களிற் கட்டி அசையும் கொடிகள் – அலைகள்; மாடங்கள் – அங்குள்ள மரக்கலங்கள்; மகளிர் – அங்குத்தோன்றும் அமுதமாவர். ஈரிடத்திலும் பேரொலியுண்டு. ஆகையின் நகரே கடலாயிற்று என,

எறிசுற வினையவ ரேந்து பூங்கொடி
மறிதிரை வரைபுரை மாட மாக்கலம்
பெறலருந் திருவனு ரமுதம் பேரொலி
அறைகடல் வளநக ராய தென்பவே.

என்னும் கேமசரியாரிலம்பகமாம்.

*(சீவகசிந்தாமணி, கேமசரியாரிலம்பகம் 35)*

2. இயங்கு திணையை நிலைத்து நிற்கும் பொருளாகக் கூறுவது:—

அகில வெற்புமின் ருணை யானவோ
அடைய மாருதம் புரவி யானவோ
முகில னைத்துமத் தேர்க ளானவோ
முரி வேலைபோர் வீர ரானவோ

என்னும் கலிங்கத்துப்பரணித் தாழிசையிற் காண்க. (347)

அவ்வாறே நிலைத்திணையை இயங்குவனவாகக் கூறுவது:—

அகழ்கிடங் கந்துகி லார்ந்த பாம்புரி
புகழ்தகு மேகலை நாயில் பூண்முலை
திகழ்மணிக் கோபுரந் திங்கள் வாண்முகம்
சிகழிகை நெடுங்கொடி செல்விக் கென்பவே.

இக்கேமசரியாரிலம்பகத்தில் (32) நிலைத்திணையாகிய கோபுரத்தை இயங்கு தன்மையாகிய மாதராகக் கூறியமை காண்க.

3. இயற்கை நிகழ்ச்சியைச் செயற்கை நிகழ்ச்சியாகக் கூறுவது:—

கண்ணகியுங் கோவலனும் வையை யாற்றைக் காண்கின்றனர். அங்கு இளங்கோவடிகள் கண்ணகிக்கு வருந் துயரினை முற்பட அறிந்து தன் துக்கத்தை மறைத்துக் கொண்டதுபோல், வையை நதி அவர்களுக்குக் காட்சியளிக்கிற தென இயற்கையைச் செயற்கையின் நிகழ்ந்ததாக,

வையை யென்ற பொய்யாக் குலக்கொடி
தையற் குறுவது தானறிந் தனள்போற்
புண்ணிய நறுமல ராடை போர்த்துக்
கண்ணிறை நெடுநீர் கரந்தன ளடக்கிப்
புனல்யா றன்றிது பூம்புனல் யாறெனா
வனநடை மாதரு மையனுந் தொழுது

(சிலப்–புறஞ்சேரியிறுத்தகாதை, அடிகள் 170–175)

எனக் கூறுவது காண்க.

செயற்கை நிகழ்ச்சியை இயற்கை நிகழ்ச்சியாகக் கூறுவது:—

உலகில் மாந்தர்க்கு வெப்பத்தால் வியர்வை வியர்ப்பதும், வெப்பம் மிகுமேல் கொப்புளங்கள் உண்டாவதும் செயற்கை. இதனைப் பாலை நிலத்தில் வைத்து அங்கு இயற்கையால் வெடிக்கும் மூங்கில் முத்துக்களாகக் கூறுகிறார் ஜயங்கொண்டார். அது,

வெடித்தகழை விசைதெறிப்பத் தரைமேன் முத்தம்
வீழ்ந்தனவத் தரைபுழுங்கி யழன்று மேன்மேற்
பொடித்தவியர்ப் புள்ளிகளே போலும் போலும்
போலாவேற் கொப்புளங்கள் போலும் போலும்

என்னும் கலிங்கத்துப்பரணித் தாழிசையால் (93) அறியலாம்.

4. இயற்கைப் பொருளைச் செயற்கைப் பொருள்களாகக் கூறுவது:— பரணியில் தேவியைப் பாடுமிடத்தில்,

அண்டமுறு குலகிரிக ளவளொருகா லிருகாதிற்
கொண்டணியிற் குதம்பையுமாங் கோத்தணியின் மணிவடமாம்
கைம்மலர்மே லம்மனையாங் கந்துகமாங் கழங்குமாம்
அம்மலைக ளவள் வேண்டி னாகாத தொன்றுண்டோ

(கலிங்கத்துப்பரணி – தாழிசைகள் 132, 133)

என்பதனால் அறியலாம்.

செயற்கைப் பொருளை இயற்கைப் பொருளாகக் கூறுவது:-

குலோத்துங்க சோழ தேவர் வீற்றிருந்த சித்திர மண்டபத்தை மகாமேருகிரி யெனக் கூறுகிற,

அம்பொன் மேருவ துகொலி துகொலென்
றுயி ரங்கதிர் வெய்யவ னையுறுஞ்
செம்பொன் மாளிகைத் தென்குட திக்கினிற்
செய்த சித்திர மண்டபந் தன்னிலே

என்னும் அப்பரணித் தாழிசையால் (315) அறிக.

அன்பர்காள்!

இதுகாறும் கூறிவந்த வற்றால் ஒன்றை மற்றொரு பொருளாக அமைத்துக் காட்டுந்திறன் புலவர் பெருமக்களுக்கே இயையும் என்பது காட்டி அவற்றுள்ளும் தமிழ்த்தேன் சொட்டுவதை யறிந்தோம். இனி தமிழ்மொழியைத் தேன் எனல்

காட்டித் தமிழ்த்தேன் என்ற என் சொற்பொழிவை முடித்துக் கொள்கிறேன். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய நிலத்து மலர்களின் இத்தமிழ்த்தேன் பெறப்படும். தேனிக்கள் தேனைப் பல பூக்களினின்று சேர்த்துத் தொகுத்துத் தாங்களும் கூட்டுண்டு பிறர்க்கும் அளிப்பதுபோல், புலவர் களும் பல்வகையிடத்துப் பொருள்களிற் காணும் இயற்கைச் சுவைகளைத் திரட்டி அச்சுவையிற்றாமும் திளைத்து ஏனையோ ருக்கும் சுவைக்கத் தருவர். அது மேற்கூறியவற்றாற் காண்க. முத்து கடலிற் பிறப்பது. சந்தனம் மலையிற் கிடப்பது. யாழ் இசைவல்லோர் பால் இருப்பது. இவ்வாறு பல இடத்துக் காணப் படும் பொருள்களை ஒன்றுகூட்டி, முத்தை மாலையாகக் கோத்து அணிந்தும், சந்தனக்கட்டையை அரைத்து மெய்யிற் பூசியும், யாழினின்றும் இசையை யெழுப்பிச் செவிக்கினிமையுறக் கேட்டும் மகிழ்வர் மாந்தர். இம்மூன்று பொருளும் வேறு வேறு இடத்து உள்ளன வேனும் பிறந்த இடத்துக்கன்றிப் பிறிதோரிடத்துப் பயன்படும் ஒற்றுமையால் ஒன்றுபடுத்தி அவற்றை உவமையாக்கி உலகியலோடு பொருத்திக்காட்டும்,

"சீர்கெழு வெண்முத்த மணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினு நீர்க்கவைதா மென்செய்யும்
பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதா மென்செய்யும்
ஏழ்புண ரின்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதா மென்செய்யும்"

நினையுங்கால் நும்மகளும் நுமக்கு மாங்கனையளே என உடன் போக்கிற் றலைவனுடன் சென்ற தன்மகளைத் தேடிச் செல்லும் செவிலிக்கு ஆற்றிடை முக்கோற்பகவர் உணர்த்திய கலித் தொகையால் அறிக.

இதனால் தமிழும் தேனும் தொகுக்கப்படுவதால் ஒன்றுனமை பெற்றும். இனி, தேன் அகத்துச் சுவை (உள்ளே சென்று இனித்தல்) யொன்றேயுடையது. தமிழோ அகத்தும் புறத்தும் சுவைகாட்ட வல்லது. இதனை அகநானூறு, புறநானூறு முதலி யவற்றில் அறியலாம்.

இன்னும் தேன் சுவைப் பொருள் ஆவதோடுகூட உடற் பிணிக்கு மருந்தும் ஆமாறு போல, தமிழும் மனத்தாற் சுவைக்கப்படும் பொருளாவதோடு அமையாமல் உயிர்க்கு மருந் தாய்ப் பிறவிப்பிணியைப் போக்குவதாகும்.

ஐயன்மீர் ! முடித்துக் கூறுமிடத்து தமிழ் அருவப் பொருள். தேன் உருவப்பொருள். ஒன்று செவியின் சுவை. மற்றென்று நாவின் சுவை. இவற்றை யொன்றெனக் கூறுவது எமது சம்பந்தப் பெருமானுக்கே அமையுமென்பதும், பிற புலவர் பெருமக்களும் வேறுபட்ட இருபொருளாகக் கூறி அவற்றின் கண்ணும் தமிழ்த்தேன் சுவை சொட்டக் கூறுவர் என்பதும், பலவிடத்துக் காணும் பொருளைத் திரட்டித் தாமும் உண்டு பிறர்க்கும் வழங்கும் தன்மையினல் தமிழ் மொழியும் தேனும் தம்முள் ஒப்பன என்பதும், ஆயின் அழியும் உடற்கு உறுதி தரும் தேனினும் அழியா உயிர்க்கு ஆக்கம் பயக்கும் தமிழ் சிறந்தது என்பதும் பெற்றும். தமிழ்த் தேனகிய செவிச் சுவைபற்றி நமது வள்ளுவர் பெருமானர் கூறும் தமிழ் மறை யாகிய

செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினு மென்

என்ற தமிழ்த்தேனைக் கூறி என் சொற்பெருக்கை முடிக் கின்றேன்.

வணக்கம்.

---

# கலித்தொகை உவமைக் கனிவு

திரு. மது. ச. விமலானந்தம் அவர்கள் எம். ஏ.,
தமிழ் விரிவுரையாளர் சரபோசி அரசர் கல்லூரி, தஞ்சாவூர்.

---

எட்டுத்தொகை நூல்களுள் ஆறுவதாக அமைவது கலித்தொகை. 135 பாடல்களைக் கொண்டது. ஐந்து புலவர்களால் பாடப் பெற்றது. கலித்தொகையின் சிறப்பையும் சீர்மையையும் ‘கற்றோர் ஏத்தும்’ என்ற அடைமொழியே அறிவியா நிற்கும். கலித்தொகையின் மாட்சிக்குக் காரணமான பல: அவற்றில் ஒன்றே அதன்கண் அமைந்த-பாட்டுக்குப் பாட்டு, அடிக்கு அடி அமைந் தொளிரும் உவமைச் சிறப்பும் ஒப்புமை அழகுமே எனலாம். உயர்வும் ஒண்மையும், இனிமையும் கனிவும் ஊட்டும் ஒரு சில உவமைகளைக் காண்பாம்.

## உறவு ஒருவருக்கு! உரிமை இன்னொருவருக்கு !!

உலகில் தோன்றும் எல்லாப் பொருள்களும் ஏதேனும் ஒரு வகையில் பிறருக்குப் பயன் தருவனவாதல் வேண்டும். அப்போதுதான் அப்பொருளுக்குச் சிறப்பும், பொருள் தோன்றிய இடத்திற்கு ஏற்றமும் ஏற்படும். அங்ஙனம் தோன்றிய திறத்தால் சிறப்போ, தோன்றிய இடத்திற்குப் புகழோ தராதாயின் அப்பொருள் தோன்றுதலைவிடத் தோன்றுதிருத்தலே சாலச் சிறந்ததாகும். இவ்வுலகில் சில பொருள்களே தோன்றிய இடத்திற்குப் பயனும் பெருமையும் தந்து சிறக்கின்றன; பெரும்பாலும் பொருள்கள் தோன்றிய இடம் ஒன்றாக இருக்கும்; ஆனால் அதனால் வரும் பயனோ இன்னொருவர் அடைவதாக அமைகிறது. இஃது இயற்கையின் நியதி; இதனை எவர்தாம் மாற்ற இயலும்?

இவ்வியல்பை இனிய எளிய முறையில் எடுத்துக் காட்டுகின்றான் புலவன். பொருளின் உறவு ஒருவருக்கு இருந்தாலும்,

அப்பொருளின் உரிமை இன்னொருவருக்கே இருக்கின்றது. இந் நியதியை மாற்றவோ மறுக்கவோ எவராலும் இயலாது! மாற்ற முனைந்தாலும் அதனால் அப்பொருள் பாழ்படுமே தவிர பயன் தராது என்பதனை எளிய இனிய முறையில் உலகியல் திறத்தால் உளம் தொடும் முறையில் உணர்த்துகின்றார் புலவர் – பாலை பாடிய பெருங் கடுங்கோ.

பெருஞ் செல்வக் குடியில் பிறந்தாள் ஒரு பெண்; அக் குடிக்கு அமைந்த ஒரு மாமணியாய் ஒளிர்ந்த அவள், உருவும் திருவும், உயர்குணமும் ஒருங்கமைந்த ஓர் இளைஞனைக்கண்டு காதல் கொண்டாள். இருவர் இதயமும் ஒன்றாயின. இருவரும் இணைந்து வாழ இயலாது போகும் என்றறிந்ததும் தாங்கள் பிறந்து வளர்ந்த ஊரையும், பெற்று வளர்த்த தாய் தந்தை யரையும் மறந்து துறந்து, கங்குற் போதிலே புறப்பட்டுத் தொலைதூரம் எங்கோ சென்றுவிட்டனர். பொழுது புலர்ந்தது; செய்தியறிந்து சிந்தை நொந்தாள் செவிலி; அவர்களைத் தேடிக் கொண்டு பாலைப் பெருவழியே சென்றாள். செல்லும் வழியில் எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணர் சிலர் வருதலைக்கண்டு நடந்து கூறி, வழியில் யாண்டேனும் அவர் களைக் கண்டதுண்டோ என வேண்டினாள்.

அந்தணர்கள் அவர்களைக் கண்டதாகவும், அவர்கள் செயல் அறத்தின் பாற்பட்டதே எனவும் கூறி, செவிலிக்குப் பொருளின் உறவு-உரிமை - உலகியல் திறத்தை ஓதி; தோன்றிய பொருளின் தோற்றத்தின் தேற்றத்தைப் பாழாக்கவேண்டா, அதுவே இயற்கை எனவும் எடுத்துக்காட்டுக்களால் உணர்த்து கின்றனர்.

மலையிலே சந்தனம் விளைகிறது; ஆயினும் அஃது என்றும் அம்மலையிலேயே அமைந்து விடுவதில்லை - அம்மலைக்கு எவ் வாற்றானும் பயன் தருதலுமில்லை. பயன்தரும் பருவம் வந்ததும் மக்களிடத்துத் திகழ்ந்து மார்பில் பூசப்பெற்று அவர்கட்குப் பயனைத் தருகின்றது. நறுமணம் நுகர்ந்த நன்மக்களும் சந் தனத்தைப் பூசி மகிழ்வதோடு, அதனைத் தோற்றுவித்த மலை யையும் நெஞ்சார நினைந்து போற்றுவர். அங்ஙனமின்றி அம்

மலையிலேயே சந்தனம் இருந்துவிடுமாயின் பிறந்த மலைக்கும் பயன்படாது வீணே அழிந்துபடும். அதனால் சந்தனத்திற்கும் சிறப்பில்லை; தோற்றுவித்த மலைக்கும் மாண்பில்லை. எனவே மலையில் சந்தனம் பிறந்தாலும் தோற்றுவித்த அம்மலைக்குப் பயன்படாது, எந்த வகையிலும் தொடர்பில்லாத மக்களுக்குப் பயன்படுகிறது!

ஆழ்கடலிலே முத்து தோன்றிடினும் அங்கேயே அஃது அமைந்து விடுவதில்லை; அக்கடலுக்கும் பயனளிப்பதில்லை. உருவும் ஒளியும் பெற்று ஒளிரும் நிலைவந்ததும், மக்களின் மார்பகத்தில் திகழ்ந்து மாண்புறுகின்றது; மாண்புறு முகத்தான் தான் தோன்றிய கடலுக்கும் புகழைத் தந்து நிற்கின்றது. அங்ஙனமின்றி கடலின் அடியிலேயே இருந்துவிடின் எவர்க்கும் பயன்படாது மங்கி மடிய வேண்டுவதுதான். அதனால் முத்துக்கும் பெருமை இல்லை; கடலுக்கும் சிறப்பில்லை. எனவே முத்து கடலில் பிறப்பினும், அக்கடலுக்குப் பயன்படாது அறவே அதனை மறந்து துறந்து எனைத்தானும் தொடர்பில்லாத எவருக்கோ பயன்படுகிறது!

ஏழிசை வல்ல யாழிலே பிறக்கிறது இசை - இன்னிசை! யாழினின்று தோன்றும் இசை அவ்யாழிலேயே அடங்கிக் கிடப்பதில்லை; உருவாகி ஒலி பெற்று எழுந்ததும், அவ்யாழை விடுத்துக் காற்றினிலே கலந்துவரும் கீதமாகச் செவி வழி புகுந்து மக்கள் சிந்தையை மகிழ்விக்கின்றது. ஓசை தரும் இன்பத்தை உணர்ந்த மக்கள் யாழைப் பாராட்டுகின்றனர்; யாழினின்று எழுந்து வரும் இசையினை அனுபவிக்கின்றனர். அங்ஙனமின்றி யாழிலேயே அவ்விசை இருந்துவிடின் அவ்யாழுக்கும் ஏற்றமில்லை, இசைக்கும் எடுப்பில்லை. எனவேதான் இசை யாழினின்று பிறப்பினும் யாழுக்கு எவ்விதத்திலும் பயன் தராது எவ்வாற்றானும் தொடர்பற்ற எவருக்கோ இன்பமளிக்கிறது!

சந்தனம் வளரும் மலையும், முத்துப்பிறக்கும் கடலும், இசை எழுப்பும் யாழும், மகளைப் பெற்ற தாயும் ஒரே நிறையினர், ஒத்த தன்மையர். மகள் பிறந்து வளர்ந்து சிறந்து

மணப்பருவம் அடையும் வரையே பிறந்தகத்தில் வாழ உரியள்; பருவம் வந்ததும் பிறந்த இடத்தையும் எண்ணுள்; பெற்றோரையும் கருதாள்; உடலை உணவூட்டியும், அறிவை உணர்வூட்டியும் உருவாக்கிய அன்னை தன்னுல் உற்ற துயரத்தை ஓராது இடையில் சந்தித்த எவனையோ நாடிச் செல்வாள். அவள் செயல் அறனெடு பட்டதே. அதனைத் தாயும் உணர்ந்து ஒன்ற வேண்டும்; அதுவே தாய்மையின் தகைமையுமாகும். அங்ஙனமின்றி, அவளைப் பிறந்தகத்திலேயே இருக்கச் செய்தால் எப்படியும் அவளால் எப்பயனும் இல்லை; பழியே வந்து சாரும். பின் ‘ தமியள் மூத்தற்று ’ எனும் கதைதான்! தக்கோர்க்குப் பயன்படாது மாண்டுபோவாள். எனவே தாயுடனே மகளும் தங்கவேண்டும் என விரும்புவது இயற்கைக்கு மாறுபட்டது, அஃது அறனுமாகாது. இக்கருத்தினைக் கொண்டுள்ள கலிப் பாட்டு வருமாறு :

பலவுறு நறும்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை
மலையுளே பிறப்பினும், மலைக்கு அவைதாம் என்செய்யும்?
நினையுங்கால், நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே!
சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கு அவைதாம் என்செய்யும்!
தேருங்கால், நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே!
ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க்கு அல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கு அவைதாம் என்செய்யும்?
சூழுங்கால், நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே!

(பாலைக்கலி-8)

## தலைவனைப் பிரிந்த நங்கையும், தண்ணீரற்ற தாமரையும் :

காதலனைப் பிரிந்த கன்னியின் நிலையைக் கனிந்துருகும் உவமையால் தீட்டிக் காட்டுகின்றுர் கவிஞர்:

ஊருக்கு உயிரூட்டுவது விழா; நாட்டிற்கு நலந்தருவது நல்லரசு; தாமரை மலருக்குத் தண்ணளி புரிவது தண்ணீர்; அஃதே போன்று தலைவிக்கு வாழ்வளிப்பது தலைவனின் பிரியாப் பெருவாழ்வே என்றும் பிரியா ஒன்றிய வாழ்வே காதலிக்குக் கனிவையும் களிப்பையும் தருவதாகும்.

தலைவனின் அருள் பெறாத தலைவி-தலைவனைப் பிரிந்த தலைவி விழவயர்ந்த ஊருக்கும், நல்லரசிழந்த நாட்டிற்கும், தண்ணீ ரற்ற தாமரைக்கும் ஒப்பாவாள் என உவமிக்கப்படுகிறது.

விழவின் காரணமாக ஆடலும் பாடலும் ஆங்காங்கே நிகழ்வுறும்; மங்கல முரசங்கள் முழங்கும்; மத்தளம் ஒலிக்கும்; அலங்காரத்தாலும் ஒப்பனையாலும் ஊரே உயிர் பெற்று, உணர்வு பெற்று உயர்ந்தோளிரும். விழாக்காண மக்கள் வெள்ளம் எல்லாப் பக்கங்களினின்றும் நாடிவந்து கூடி நகருக்கே வனப்பூட்டியிருப்பர். அத்தகைய மகிழ்ச்சிப் பெருக் கிலே செம்மாந்து இருந்த நகர், விழா முடிந்த பின்னர் விழாச் சிறப்பனைத்தும் விலக, கூடிவந்து குழுமிய மக்களெல்லாம் விட்டுச் செல்ல, சீரழிந்து வனப்பிழந்து பொலிவிழந்து தோன்றும். விழாக் காலத்து வதிந்த ஏற்றமும் தோற்றமும், விழவயர்ந்த பின்னர் 'வெறுச்சோ'வென வனப்பிழந்து காணும் நிலையைத் தலைவனைப் பிரிந்து தனிமையில் வாடும் தலைவிக்கு ஒப்பிடுகின்றார்.

வசியும் வளனும் சிறக்கச் செங்கோலோச்சும் நல்லரசைப் பெற்ற நாடு, குடிபொன்ற கொடுங்கோலரசாய் மாறின், பசியும் பிணியும் பகையும் மல்க, அல்லலுற்று ஆற்றாது அலமந்து புலம்பும் மக்கள் அந்நாடு விட்டுப் 'பிறநாடு செல்ல' மக்கள் எவருமிலாமையால் ஆறலைக் கள்வரும் கூகையும் கோட்டானும் வதியும் பாழிடமாகத் திரிந்துவிடும். நல்ல நாடு கொடிய காடாக மாறும் இந்நிலையைத் தலைவனைப் பிரிந்தமையால் அழகு கெட்ட முகத்தினளாக நலமிழக்கும் தலைவிக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

தாமரையின் செழுமைக்குத் தண்ணீர் காரணமாகும்; தழைத்துப் படரத்தக்க தடாகத்தில் தண்ணீர் வற்றியவுடன் தாமரையும் வனப்பிழந்து வாடிக்கருகுமாப் போன்றே, தலை வனைப் பிரிந்த தலைவியின் உயிரும் ஓர் இராமுழுதும் ஊசலாடி நிற்கும் என்கிறார் கவிஞர்; இதோ கவிதை

கள்ளனக் கவின்பெற்ற விழவு ஆற்றுப் படுத்தபின்
புல்லென்ற களம்போலப் புலம்புகொண்டு அமைவாளோ ?

ஆள்பவர் கலக்குற அலைபெற்ற நாடுபோல்
பாழ்பட்ட முகத்தோடு பைதல்கொண்டு அமைவாளோ?
ஓர்இரா வைகலுள் தாமரைப் பொய்கையுள்
நீர்நீத்த மலர்போல நீ நீப்பின் வாழ்வாளோ? (பாலைக்கலி-4)

இவ்வுவமை நுட்பத்தை ஓர்ந்து தெளிதல் வேண்டும். சிறப்பும் வனப்பும் இழந்த ஊர்கள் மீண்டும் விழாவயர வாழ்வு பெறுதல் கூடும்; வல்லரசால் பொன்றிய நாடு நல்லரசு வாய்க்கப் பெற்று மீண்டும் மாண்புறுதல் கூடும்; தண்ணீர் வற்றினும் தாமரை ஓர் இரவு முழுதும் வாடாது விளங்கவும் கூடும். ஆனால் தலைவனைப் பிரிந்ததும், பிரிவெனும் பெருந் துயர் பொருது தலைவியின் உயிர் உடலை விட்டுப் பிரிந்துவிடின் மீண்டும் வாழ்வளிக்க வகையுண்டோ? என்ற உட்குறிப்பையும் உணரவைக்கின்றார் புலவர்.

**நலன் நுகரப்பட்ட மங்கையும் நலனழிந்த மலரும்:**

சில பொருள்கள் தமக்குரிய தகுதியால்-தாம் பெறும் இடத்தால் ஏற்றம் பெறும்; தகுதி குறைந்தால்-இடத்தினின்று வழுவினால் இகழப் பெறும்; எடுத்துக் காட்டு-தலையினின்று இழிந்த மலர். சில பொருள்கள் தமக்குரிய இயல்பு இருக்கும் வரை போற்றப்படும்; இயல்பு இழப்பின் பேணப் பெறாது ஒதுக்கப் பெறும்; எடுத்துக்காட்டு-வாடியமலர். இவ்விரு நிலையும் நல மிழந்த நங்கைக்குப் பொருந்தும்.

தண்ணீர் உண்ணுதற்குக் கலங்கள் (குவளை போன்றன) ஏதுமில்லா இடத்தில் பனையோலையைக் குடைவாகப் பண்ணி அதில் தண்ணீர் மொண்டு பருகுவர்; நீர்வேட்கை தணிந்த பின்னர் அக்குடையோலையை எறிந்து விடுவர், நீர் பருகு முன்னர் முயன்று குடையோலையைச் செய்தவர்கள், நீரருந்திய வுடனே எறிந்துவிடும் குடையோலை போன்றனரே கணவரால் நலன் நுகரப்பட்டு துறக்கப்பட்ட மகளிர் என்கிறார் கவி.

வளத்தின் காரணமாகவும், வாணிபத்தின் காரணமாகவும் செழித்துச் சிறந்தும் மக்கள் குழுமியதுமான நகரானது, பின்னர் வாணிப வளமின்மையாலோ வேறு காரணம் பற்றியோ மக்கள்

அனைவரும் அந்த நகரைவிட்டு நீங்கின் அவ்வூர் பாழூர் ஆகும். அத்தகையரே நலன் நுகரப்பெற்ற பெண்டிரும்.

இதனைவிட இன்னும் பொருந்துமாறு அமைந்த உவமை: நிறமும் திறமும் மிக்க மலர்களை விரும்பிச் சூடி மகிழ்ந்து, பின்னர் அம்மலர் வாடி வதங்கவே அதனை வெறுத்துக் களைந் தெறிவர். கணவரால் நலனுண்டு விடப்பட்ட மகளிர் இங்ஙனம் சூடி எறியப்பட்ட மலருக்கு நிகராவர் என்பதாம்.

தோள்நலம் உண்டு துறக்கப் பட்டோர்
வேளிர் உண்ட குடை; ஓர் அன்னர்;
நல்குநர் புரிந்து நலன்உணப் பட்டோர்
அல்குநர் போகிய ஊர்; ஓர் அன்னர்;
கூடினர் புரிந்து குணன்உணப் பட்டோர்
சூடினர் இட்ட பூ; ஓர் அன்னர். (பாலைக்கலி 22)

காதலனும் கடனாளியும்:

ஒரு முறையில் காதலனும் கடன் பெறுவானை ஒத்துளான். கடன் வாங்குவோன், கடன் கொடுப்பார் முன் பல்லெல்லாம் தெரியக்காட்டி, பருவரல் முகத்திற் கூட்டி, சொல்லெல்லாம் சொல்லி நாட்டி துணைக்கரம் விரித்து நீட்டி நிற்கும் நிலையே வேறு; அப்போது அவர்கள் முகத்தோற்றமே வேருக இருக்கும்; ஆனல் பன்னுள் கழிந்து கடன் தந்தவர்கள் கடனைத் திருப்பித் தருமாறு கேட்குங்காலை கடன் பெற்றவர் நிற்கும் நிலையே வேறு; பேயைக் கண்டார் போல் பேதுற்று உள்ளூறத் தூற்றிக் கொண்டு வெறுப்போடு நிற்பர். கடன்பெறும் போது இருந்த நிலைக்கும், கடனைத் திரும்பக் கொடுக்கும்போது இருக்கும் நிலைக்கும் எவ்வளவோ வேறுபாடு இருக்கும்.

அதுபோன்றே காதலரும் எனலாம். தனக்கு வேட்கை மிதுற்றகாலை தாதுநாடித் தேடியுண்ணும் வண்டேபோல், மக ளிரைப் பலபடப் பாராட்டி, நலன் நுகர்ந்துவிட்டுப் பின்னர், அவர்கள் கூடி முயங்குதலை நாடும்போது அதனைச் செய்யாது அவர்களை மறந்து துறந்து பொருள்தேடிச் செல்லும் தலைவனும் கடன்காரனைப்போல், தாம் நலன் நுகரும்போது முகமன்கூறி

மயக்கிப், பின்னர் அவர்கள் நாடுங்காலை மனமழுங்கி ஒதுங்கிச் செல்லும் திறம் தெளியத் தக்கது.

உண்கடன் வழிமொழிந்து இரக்குங்கால் முகமனும், தாம்
கொண்டது கொடுக்குங்கால் முகனும் வேறு ஆகுதல்
பண்டும் இவ்வுலகத்து இயற்கை; அஃது இன்றும்
புதுவது அன்றே; .... .... ...
.... .... ... ... ....
நலன்உடையார் மொழிக்கண் தாவார்; தாம் தம் நலம்
தாதுதேர் பறவையின் அருந்து இறல்கொடுக்குங்கால்
ஏதிலார் கூறுவது எவனோ? (பாலைக்கலி-21)

### வேழமும் வீமசேனனும்:

காட்டின் கொடுமையைக் காட்ட வந்த கவிஞர், அங்கே அதனை விளக்க புராணக் கதை யொன்றையும் உவமிக்கின்றார். ஒரு காடு; அதுவும் உலர்ந்த மூங்கில் மரங்கள் சூழ்ந்த காடு. ஓங்கி வளர்ந்த மூங்கில்கள் ஒன்றோடொன்று உராய்வதால் தீப்பற்றிக்கொள்ள, தீ காடெங்கினும் பரவியது. அக்காட்டினுள் களிப்பு விளங்க நின்ற களிறுகள் பல உள்ளே உள்ளன. காட்டினுள்ளே களிறுகள் உறைய, தீச்சூழும் நிலையைக் கண்ட வேழம் ஒன்று, அப்பெருந் தீயைக் கால்களால் மிதித்துத் துவைத்து புதுவழியொன்றைப்பண்ணிஅவ்வழியே தன்இனத்தை வெளியேற்றிச் செல்லும் கொடிய கானம் என்கிறார்.

இங்கே பாரதக் கதையையும் பொருந்த வைக்கிறார் புலவர். கௌரவர்கள் மூத்தவனான துரியோதனன், பாண்டவர்களை ஒழித்துவிட எண்ணி, அவர்கள் வதிந்த அரக்கு மாளிகையைத் தீயூட்டினனன்றோ? அக்கதையை இங்கு ஒப்பிடப்பட்டுள்ளது. துரியோதனன் சூழ்ச்சியால் உடன் பிறந்தார்களையும் தன்னையும் அரக்குமாளிகையுள் வதியும்போது தீ மூட்டப்பட்டது கண்ட வீமசேனன் அம்மாளிகையுள் புதுவழி செய்து அதன் மூலமாகத் தன்உடன் பிறந்தாரையும் தீயினின்றும் காப்பாற்றினன்.

காட்டுத் தீயினின்று களிறுகளைக் காத்த வேழத்தின் செயல், அரக்கு மாளிகை தீப்பற்றியதாக அதனின்றும் உடன்

பிறந்தாரைக் காப்பாற்றிய வீமசேனன் செயலைப் போன்றுளது என்கிறார் கடுங்கோ. இவண் உவமை இன்பத்தோடு, பாரதக் கதையின் நல்ல கட்டத்தையும் நினைந்து மகிழும்நிலை ஏற்பட்டுளது.கதை பொதிந்த அவ்வுவமைக் கவிதை வருமாறு:

வயக்குறு மண்டிலம் வடமொழிப் பெயர்பெற்ற
முகத்தவன் மக்களுள் முதியவன் புணர்ப்பினால்
ஐவர் என்று உலகேத்தும் அரசர்கள் அகத்தராக்
கைபுனை அரக்குஇல்லைக் கதழ்எரி சூழ்ந்தாங்குக்,
களிதிகழ் கடாஅத்த கடுங்களிறு, அகத்தவா,
முளிகழை உயர்மலை முற்றிய முழங்குஅழல்
ஒள்ளுரு அரக்குஇல்லை, வளிமகன் உடைத்துத்,தன்
உள்ளத்துக் கிளைகளோடு உயப்போகு வான்போல்,
எழூஉறழ் தடக்கையின் இனம்காக்கும் எழில்வேழம்,
அழுவம்சூழ் புகைஅழல் அதர்பட மிதித்துத், தம்
குழுவொடு புணர்ந்துபோம் குன்றுஅழல் வெஞ்சுரம்

(பாலைக்கலி 24)

**உடற்பகையும் உலகியல் பகையும்:**

காதலன் காதலியோடு இருக்கும் காலத்து கண்கள் மலர்ந்தும், வளைகள் செறிந்தும், நெற்றி ஒளி பொருந்தியும் இருக்கும்; ஆனால் காதலன் பிரிந்தானே இல்லையோ, கண்கள் கண்ணீர் மல்கி காதலன் பழியைப் பிறருக்குக் காட்டா நிற்கும்; காதலன் பிரிவை தோள்களின் நலிவால் அறிந்த வளைகள் கையினின்றும் கழன்று காதலன் கொடுமையைக் கூறாநிற்கும்; நெற்றியோ எனின் காதலன் பிரிந்த அக்கணமே பசலை மேவி பழி தூற்றா நிற்கும்.

காதலன் பிரியும் முன்னர் உடலோடு பொருந்தி ஒளி வீசி நின்ற கண்களும், வளைகளும், நெற்றியும், காதலன் பிரிந்தவுடனே நலமிழந்து தலைவன் செயலைத் தம்பட்ட மடிக்கின்றனவே! உடலின் கூறுகளாக அமைந்தும் ஒத்துழையாது பகை பாராட்டுகின்றனவே! இஃதென்னே என வியக்கின்றாள் தோழி. இதனை உலகியல் கொண்டு விளக்குகின்றார் பெருங்கடுங்கோ:

கண்கள் கலுழ்தற்குப் புறங்கூறித் திரியும் புன்மையை யும், வளை கழலதற்குப் பொருளில்லாத போழ்து பிரியும் தன் மையையும், நுதல் நலமிழத்தற்கு இரகசியத்தை வெளியிடும் இழிகுணத்தையும் எடுத்தியம்புகின்றார்:

தம்மிடத்தே சிலர் இருக்கும்போது சிறப்பு செய்து ஏற்றிப் போற்றி, அவர்கள் சென்றதும் பலரறிய அவர்தம் பழியைப் பலருக்கும் கூறும் புறங்கூறுவாருடைய உறவுபோல; கண் களும் காதலன் உடனுறையும் போது கவின் மிகுந்து காட்சி யளித்து, பிரிந்ததும் கண்ணீர் விடுத்துக் கணவன் பழியைக் காட்டா நிற்கின்றனவாம்.

ஒருவருக்குச் செல்வமுண்டாய காலத்து நெய்க்குடத்தை நாடி வரும் எறும்பே போல், அவரைத் தேடிவந்து இமைப் பொழுதும் நீங்காதிருந்து செல்வத்தை நுகர்ந்து, அன்னவர் செல்வமிழந்து, சிறப்பிழந்து, சீரழிந்தவுடனேயே நன்றி கருதி அவர்க்கு நல்லுதவி செய்ய வேண்டுவதை வுணராது, விட்டுப் பிரிந்து செல்லும் வீணர்தம் தொடர்பே போல், கணவன் கூடி யிருந்து அருள் செய்யுங்காலத்து கையிற் கிடந்து அழகு செய்த வளைகள், ஒருநாள் தலைவன் பிரிய நேர்ந்தபோது கழன்று அவன் பழியைப் பலர் அறியச் செய்தனவாம்.

மனம் கலந்து பழகிய திறத்தாலே, எவரிடத்தும் இயம்பலாகா மறைபொருளை ஒன்றிய உள்ளமும் ஓங்கிய உறுதியும் உடைமையாலே தன்பால் கூறி நீங்கினுனாக, நீங்கிய அக்கணமே பீடின்றிப் பலரிடத்தும் அம்மறை பொருளைப் பகரும் பண்பிலார் தொடர்பே போல்; கணவன் பிரியாது பக்கத்து இருக்கும்போது ஒளிவீசி ஒளிர்ந்த நெற்றி, அவன் பிரிந்தானாக, பசலை படர்ந்து பழி தூற்றத் தொடங்கினவாம். இதோ கவிதை:

மணக்குங்கால் மலரன்ன தகையவாய்ச் சிறிதுநீ
தணக்குங்கால் கலுழ்புஆனாக் கண்ணெனவும் உளவன்றே?
சிறப்புச் செய்து, உழையராப், புகழ்போற்றி, மற்றுஅவர்
புறக்கொடையே பழிதூற்றும் புல்லியார் தொடர்புபோல்;
ஈங்குநீர் அளிக்குங்கால், இறைசிறந்து, ஒருநாள்நீர்

நீங்குங்கால் நெகிழ்போகும் வளையெனவும் உளவன்றே?
செல்வத்துள் சேர்ந்து, அவர் வளன் உண்டு, மற்றவர்
ஒல்கிடத்து உலப்பிலா, உணர்விலார் தொடர்புபோல்;
ஒருநாள் அளிக்குங்கால், ஒளிசிறந்து, ஒருநாள்நீர்
பாராட்டாக் கால்பசக்கும் நுதல்எனவும் உளவன்றே?
பொருந்திய கேண்மையின் மறைஉணர்ந்து, அம்மறை
பிரிந்தக்கால் பிறர்க்குஉரைக்கும் பீடிலார் தொடர்புபோல்
(பாலைக்கலி 24)

புறங்கூறும் தன்மைக்குக் கண்களையும், பொருளற்ற வறிய நிலையில் பிரியும் புல்லர்க்கு வளைகளும், இரகசியத்தை எடுத்துரைக்கும் இழிவுடைமைக்கு நெற்றியையும் ஒப்பிட்டு உவமை கூறிய ஒண்மையும் உயர்வும், நயமும் நலமும் எண்ணி எண்ணி மகிழும் இயல்பினதாகும்.

---

இராகம்: தன்யாசி. பல்லவி தாளம்: ஆதி.

வாவென்றுனைநான் ஒருபோதும் அழையேன் –
வந்தால் போவென்று புகல்வேன் அல்லேன் – (வா)

அநுபல்லவி

தாவென்றுனைநான் கேட்டறியேன் – நீ
தந்தாலும் அதைப் புறக்கணிப்பே னல்லேன் –
காவா யெனவே கோரியதில்லை –
காக்கும் கடமை உனதாகையினால் – (வா)

சரணம்

மூவா முதலே முக்கணுயகனே
தேவாதில்லைப் பெருவெளி நாதா
கோவா முத்தே கோனே யரனே
சாவா மருந்தே யாயினும் வேண்டேன் – (வா)
வேண்டுவ தொன்றே யீவாய் இறைவா!
வேண்டல் இல்லா மனமுடை யடியவர்
ஈண்டு மிடந்தொறும் என்றும் யானும்
மீண்டும் மீண்டும் இருந்திட அருள்வாய் – (வா)

T. B. SIDDALINGAIAH,
15A 59. W. E. A.,
Karol Bagh, New Delhi – 5.

# திருக்கூட்டம்

T. B. SIDDALINGAIAH
15A/59. W. E. A; Koral Bagh New Delhi-5

உலகில் நன்மை தீமை என இருவகைப் பண்புகள் நிலவுகின்றன. பிறருக்கு நன்மை தருபவை நற்செயல்கள் என்றும், தீமை பயப்பவை தீயசெயல்கள் என்றும் கூறப்படுகின்றன. நன்மை செய்வதை வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டவன் நல்லவன்; பிறருக்கு அல்லல் தருவதையே ஒழுக்கமாகக் கொண்டிருப்பவன் தீயவன். மக்கள் இப்படி இரண்டு பிரிவினராகப் பிரிக்கப்பட்டிருந்தாலும் கூட, மனிதர் என்ற வகையிலே அனைவரும் ஒன்றுதான்.

நிலத்தியல்பால் நீர்திரிந்தற்ருகும்; மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு

என்கிருர் திருவள்ளுவர். வானத்திலிருந்து வீழும் மழைநீர் ஒரே தன்மையுடையதுதான் என்ருலும், வீழும் இடத்தின் தன்மைக்கேற்ப நிறமும் சுவையும் பெறுகிறது அந்நீர். அதே போல மனிதன் தன்னியல்பால் விகாரமற்றிருப்பவனேயாகும்; ஆனுல் அவன் சேர்ந்துள்ள கூட்டமே அவனுக்கொரு தன்மையை ஊட்டுகிறது என்பது இந்தத் திருக்குறளின் பொருளாகும்.

மனிதனை மனம் ஆட்டி வைக்கிறது. மனத்தையடக்கி, அதைத் தம்வழியில் செலுத்தியவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. ஒவ்வொருவரும் தமது மனம் நல்லது, சிறந்தது என்றே கருதுகிருர்கள், ஆனுல் உலகம் அவர்களது செயலை ஏற்றுக் கொள்வதில்லை; நல்லதாகிய தமது மனம் நடத்துகிற

வழியே தாம் செல்வதாக அவர்கள் கருதுகிருர்கள். ஆனல் உண்மை அதுவல்ல; அவர்கள் எந்தக் கூட்டத்தைச் சேர்ந்திருக்கிருர்களோ அந்தக் கூட்டத்தாரின் - அந்த இனத்தின் - தன்மை அவர்களையும் சேர்த்துப் பிடித்துக் கொள்கிறது. அதன் படி அவர்கள் நடக்கிருர்கள். இதைத்தான்,

மனத்துளது போலக் காட்டி ஒருவற்கு
இனத்துள தாகும் அறிவு;

என்ற குறள் எடுத்துச் சொல்கிறது.

நல்லவர்களைக் கொண்டது நல்லினம்; தீமையே தமது மூச்சாகக் கொண்டு வாழ்பவர்களை உடையது தீயஇனம். நல்லினம், சேர்ந்தவர்களுக்கு நன்மையே தரும்; சிறப்பு உண்டாக்கும். சேர்ந்தவர்களை அழிக்கும் தனிப்பெருமை தீய இனத்துக்குண்டு.

நல்லினத்தி னூங்கும் துணையில்லை; தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல்.

நல்லினத்தாரை அடைவதால் என்ன பயன்? நன்மை என்பது என்ன? என்பதற்குப் பழைய செய்யுள் ஒன்று பதில் அளிக்கிறது.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே – நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி யிருப்பதுவும் நன்று.

நல்லார் யார்? அவர் குணங்கள் என்ன? அவர்கள் எப்படி யிருப்பார்கள் என்றெல்லாம் கேள்வி பிறக்கலாம்.

மரங்கள் சேர்ந்திருந்தால் தோப்பு; கால்நடைகள் திரண்டிருந்தால் மந்தை; மக்கள் கூடியிருந்தால் கூட்டம். பொதுக் கூட்டம், அல்லது பொதுமக்கள் கூடியிருந்த நிலைபற்றி இந்த நாளில் பத்திரிகைகளில் பார்க்கிறோம். மக்கள் வேறுபாடு இல்லாமல்,– நல்லவர், தியவர், உயர்ந்தவர் - தாழ்ந்தவர், செல்

வர்-வறியவர் என்ற பாகுபாடு இல்லாமல் திரண்டு இருப்பது கூட்டம். நல்லவர்கள், உயர்ந்தவர்கள், பிறருக்கு வழிகாட்டும் நிலையிலிருப்பவர்கள், வேண்டாமை என்ற விழுச் செல்வமுடைய வர்கள் நிறைந்துள்ள கூட்டம் திருக்கூட்டமாகும்.

இறைவன் புகழ்பாடி இணங்கியிருக்கும் கூட்டம் திருக்கூட்டமாகும்; அதுதான் நல்லினம்; நல்லார் குழு. "வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினில் யான் ஒருவன் அல்லனோ' என்று வள்ளலார் கூறும் திருக்கூட்டம் இதுவேயாகும். திருநின்ற செம்மையுடைய அடியாரெல்லாம் திருக்கூட்டத்தாராவர்.

இந்தத் திருக் கூட்டத்தினரின் குணங்கள் எவை என்பதைச் சேக்கிழார் பெருமான் விளக்குகிறார்.

பூசுகின்ற திருநீற்றைப் போலவே உள்ளமும் புனிதமாக வாழ்பவர்கள், இவ்வடியார்கள், எந்த நிலையிலும் இறைவன் திருவடி மறவாத சிந்தையை உடையவர்கள், தீதற்ற குணக் குன்றாக விளங்குபவர்கள்.

பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும்
மாதொர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்,

அவர்கள் பின்னும், செல்வத்தில் பற்றிலாதவர்கள். இறைவனைத் தொழவேண்டும் என்பதுதான் அவர்கள் குறிக்கோள், வீடு என்பது கூட வேண்டியதில்லை அவர்களுக்கு!

கூடும் கொள்கை கும்பிடலே யன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்

என்று பெரிய புராணம் கூறுகிறது.

நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றாடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை
குன்றாத உணர்வுடையார்.

இத்திருக் கூட்டத்தார்! கடவுள் திருவருளை நினைந்து நினைந்து உருகும் நெஞ்சம்; அதன்விளைவாக ஆறாய்ப் பெருகும் கண்ணீர்;

ஆண்டவனுக் கன்பன் என்று எடுத்துக் கூறும் வகையிலே அமைந்துள்ள சமயச் சின்னங்கள்; இதுவே அத்தொண்டர்களின் திருவுருத்தோற்றம்.

இத்தகைய அடியார்களைத் தேடிச் சென்று வணங்குவதே உயிர்க்கு உறுதி பயக்கும். இதையே 'பாகவத சேவை' என்பார்கள். இத்தகைய அடியார்களோடு சேர்ந்திருப்பது பெரும் பேறு. ஒருவனது மனத்தைச் செந்நெறியிலேயே செலுத்த இவ்வடியார்களது சேர்க்கை துணைபுரியும்.

தனித்திருந்தால் தவறிவிடுவோம்; மனம் தன்னிச்சைப்படி செல்லும்-என்று அஞ்சியே அன்பர்கள் எல்லாம் அடியார்களோடு சேர்ந்திருக்கும் நிலைவேண்டும் என்று விரும்பினார்கள். 'நல்லாரிணக்கமும் நின்பூசை நேசமும்' என்றார் ஓரடியார்.

தங்கமே யனையார் கூடியஞான சமரசசுத்த சன்மார்க்க
சங்கமே கண்டுகளிக்கவும் சங்கம்சார் திருக்கோயில் கண்டிடவும்
துங்கமே பெறும் சற்சங்கம் நீடூழி துலங்கவும் சங்கத்திலடியேன்
அங்கமே குளிர நின்றனைப்பாடி யாடவும் இச்சைகாண் எந்தாய்

என்றார் அருட் பிரகாச வள்ளலார்.

இறைவனடியாரைத் துணைக்கோடல், இறைவனையடைய எளியவழி என்றே எல்லாச் சமயத்தினரும் குறிப்பிடுகிறார்கள். சங்கம் சரணம் கச்சாமி என்பதும் இதையே குறிக்கிறது.

நல்லினம் நன்மை தரும்; திருவருள் பெற்ற அடியார் கூட்டமே திருக்கூட்டம்; அத்திருக்கூட்டம் ஆன்மவுறுதிக்கு அருந்துணையாய் அமையும், இதையே இறையடியார் அனைவரும் வேண்டுவர் என்று கண்டோம்.

திருவருள் பெற்றவருள் தலையாயவராய மாணிக்கவாசகர் சிவபெருமானிடத்திலே ஒரு பேரம் பேசுகிறார். "இறைவனே! நீ பெரியவன். உனக்கு என் நெஞ்சிலே இடம்பெற வேண்டும் என்று ஆசை; நீ இங்கே வருவதில் தடையில்லை; அப்படி வருவதற்கு ஒரே ஒரு நிபந்தனை; நீ என்னிடத்தில் வந்து

(தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க)

# மக்கீச்சுரம்

தவத்திரு. சபாபதி சுவாமிகள் அவர்கள்.
(ஸ்ரீமத் மௌனசுவாமிகள் மடாலயம், சிதம்பரம்)

——[o]——

சோழ நாட்டில் குடந்தையம் பதியில் நிலைபெற்றுள்ள வீரசைவ ஞான பீடத்தில் அமர்ந்து சிவநெறி வளர்த்த அருட்குரவர்களில் முனியமல்லேசர் என்பவரும் ஒருவர். இப்பெரியார், பரத கண்டத்தில் தென்னாட்டிலும் வடநாட்டிலும் உள்ள சிவ தலங்கள்தோறும் சென்று வணங்கிச் சிவநெறி பரப்பும் திருமடங்களை அமைத்து மக்கா நகரத்தை அடைந்தன ரென்றும், அத்தலம் முற்காலத்தில் மக்கவீச்சுரம் எனப் போற்றப்பெறும் சிவதலமாக விளங்கிய தொன்மைச் சிறப்பு வாய்ந்ததென்றும், அங்குள்ள மசூதியிற் கட்டப்பெற்றுள்ள பெரிய மணியே அதற்குச் சான்றாய் விளங்குவதென்றும், அத் தலம் பிற்காலத்தில் மகமதிய மக்களின் புண்ணிய தலங்களுள்

---

"சித்தாந்தம்" மார்ச் 1960-ல் வெளிவந்துள்ள இக்கட்டுரை ஆசிரியர் அனுமதியுடன் பிரசுரிக்கப் பெற்றது.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

இருப்பதானல், நான் உன்னடியாரிடையே இருக்க வேண்டும்" என்று கூறுகிறார்.

உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி;
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானல் அடியேன் உன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே

என்பது திருவாசகம்.

இதைவிட மிகுதியாக, திருக்கூட்டத்தின் சிறப்பைப்பற்றி என்ன சொல்ல முடியும்?

---

தலைமையுடையதாகப் போற்றப்பெறும் நிலையை எய்தியதென்றும், மழையமல்லேசர் மக்கிச்சுரப் பெருமானை வழிபட விரும்பி மக்கா நகரத்தையடைந்த பொழுது அம்மசூதியிலுள்ள மணி தானே ஒலித்ததென்றும், அதுகண்டு மழையமல்லேசரின் பெருமையை யுணர்ந்த மகமதியர்கள் அவரை அன்புடன் வரவேற்றனரென்றும், மல்லேசர் மக்கிச்சுரப் பெருமானை வணங்கி மகிழ்ந்ததுடன் சைவ சமயத்திற்கும் மகமதிய சமயத்திற்கும் தெய்வக் கொள்கையில் அமைந்த அடிப்படையாகிய ஒருமைப்பாடு விளங்கும் முறையில் 'ஒருவனே தேவன்' என்னும் உயர்ந்த கோட்பாட்டினை அங்குள்ளோர்க்கு மகமதிய மறை நூலிலிருந்து எடுத்துரைத்து அவர்களாலும் அங்கு வந்திருந்த தில்லி மன்னனாலும் பாராட்டப்பெறும் சிறப்பினைப் பெற்றுத் திரும்பினர் என்றும் 'வீரசிங்காதன புராணம்' கூறும்.

'வீர சிங்காதன புராணம்' என்பது வீர நரசிங்கன் என்னும் வேந்தனது வேண்டுகோட் கிணங்கிச் 'சோமசேகர தேசிகர்' என்பவரால் கன்னட மொழியில் இயற்றப்பெற்ற புராணத்தின் தமிழ்மொழி பெயர்ப்பாகும். இதன்கண் பெருமாத்தூர் மடம் வேலைய சுவாமிகளும், கோட்டூர் உமாபாக தேவரும் பாடிய சருக்கங்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் மேல் எடுத்துக்காட்டிய மழைய மல்லேசுரச் சருக்கம் முதலிய மூன்று சருக்கங்களையும் பாடியவர், கற்பனைக் களஞ்சியமெனப் போற்றப்பெறும் சிவப்பிரகாச சுவாமிகள் தம்பியார் வேலைய சுவாமிகளாவர். கி. பி. 17-ஆம் நூற்றுண்டினராகிய இப்புலவர் பெருமான், மகமதிய சமயத்தாரால் புண்ணிய தலமாகப் போற்றி வழிபடப்பெறும் மக்கா நகரத்தில் அமைந்த மக்கவிச்சுரமென்னும் திருக்கோயிலின் தொன்மை யமைப்பினையும் அதனையொட்டி மகமதியர்களால் வழிபடப்பெறும் மசூதியாகிய பள்ளி அமைந்திருத்தலையும்,

பூருவந் தன்னின் மக்க வீச்சுர மெனப் பொலிந்தே
மேரு வொப்பென விளங்கிடுங் கோயில் பள்ளி யதாய்ச்
சாருமால்இது சான்றநம் தம்பிரான் சபைமுன்
பாரிதாமணி தூக்கிடப் பட்டுறும் பரிவால்"

(வீரசிங்காதன-மழைய மல்லேசுரச் சருக்கம் 81-ம் செய்யுள்.)

எனவரும் பாடலில் தெளிவாகக் குறித்துள்ளார்.

இங்கே குறிக்கப்பெற்ற மக்கீச்சுரம் என்பது, திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய அடைவு திருத்தாண்டகத்தில் எடுத்துரைத்துப் போற்றப்பெறும் பழமையான சிவதலங்களுள் ஒன்றாகும். இவ்வுண்மை,

நாடக மாடிடம் நந்திகேச் சுரம்
மாகா ளேச்சுரம் நாகேச்சுரம் நன்கான
கோடீச்சுரம் கொண்டீச்சுரம் திண்டீச்சுரம்
குக்குடேச்சுரம் **மக்கீச்சுரம்** கூறுங்கால்
ஆடகேச்சுரம் அகத்தீச்சுரம் அயனீச்சுரம்
அத்தீச்சுரம் சித்தீச்சுரம் அந்தண்கானல்
ஈடுதிரை இராமேச்சுரம் என்றென்றேத்தி
இறைவனுறை சுரம்பலவும் இயம்புவோமே [1–7–18

எனவரும் திருப்பாடலாலும், "மக்கீச்சுரம் என்பது சிவத்தலமென்பதனைத் தேவாரம் அடைவு திருத்தாண்டகத்தானும் உணர்க" எனச் சிதம்பரம் ஈசானியமடம் இராமலிங்க சுவாமிகள் மேற்குறித்த வீர சிங்காதனப் புராணச் செய்யுளுக்கு எழுதியுள்ள அடிக்குறிப்பாலும் நன்கு தெளியப்படும். உலக நாடுகள் பலவற்றிலும் ஆங்காங்கே பழமையான சிவலிங்கத் திருவுருவங்கள் காணப்படுதலாலும், குமரிமுதல் இமயம் வரையுள்ள சிவ தலங்களை நேரிற் சென்று கண்டு வழிபடும் உறுதியினைத் தம் வரலாற்றிற் செயற்படுத்திக் காட்டிய திருநாவுக்கரசர், இந்திய நாட்டினையடுத்து மேற்றிசையில் அமைந்துள்ளதும் ஆராய்ச்சியாளர் சிலரால் மேற்றிசைக் கயிலை எனக் கருதப் பெறுவதுமாகிய* மக்கா நகரத்திலுள்ள திருக்கோயிலைத் தாம் பாடிய அடைவு திருத்தாண்டகத்தில் 'மக்கீச்சுரம்' என்ற பெயராற் குறித்துப் போற்றியிருத்தல் இயல்பாக நிகழக்கூடியதேயாதலாலும், மக்கா நகரத்திற் காணப்பெறும் சிவலிங்கத் திருவுருவம் அப்பரடிகள் காலமாகிய கி. பி. ஏழாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட தொன்மை வாய்ந்ததென்பது நன்கு துணியப்படும்.

*காலஞ் சென்ற தமிழ்ப் பேராசிரியர் – இராவ்சாகிபு – மு. இராகவையங்காரவர்கள் இக்கருத்தினை அன்பர் சிலரிடம் தெரிவித்துள்ளார் என அறிகின்றேம்.

இதுகாறும் எடுத்துக்காட்டிய குறிப்புக்களால் மகமதிய மக்களால் புண்ணிய தலமாக வழிபடப் பெற்றுவரும் மக்கா நகரத்திலேயே முற்காலத்திற் சிவநெறிச் செல்வர்களால் வழி படப்பெற்ற சிறப்புடைய மக்கிச்சுரம் என்னும் திருக்கோயில் அமைந்துள்ளமை இனிது புலனும். இத் திருக்கோயிலில் அமைந்த சிவலிங்கத் திருவுருவம் மக்காவிலுள்ள மசூதியாகிய பள்ளியை யடுத்து இன்றும் மாருது அமைந்துளதென அறி கின்ரேம்.

விகாரி, கார்த்திகை 8-ம் தேதி செவ்வாய்க்கிழமை (24—11—59) வெளிவந்த 'தினமணி' என்னும் செய்தித் தாளில் 4-ஆம் பக்கம் 5-ஆம் பத்தியில் பின்வருவமாறு ஒரு செய்தி வெளிவந்துள்ளது:-

**மெக்கா மசூதியில் சிவலிங்கம்!**

புது டில்லி நவ - 23.

மெக்கா மசூதியில் ஒரு சிவலிங்கம் இருக்கிறது. அஸ்ஸாம் மெம்பர் ஸ்ரீ பி. ஸி. பரூவா இவ்விஷயத்தை இன்று லோக் சபையில் தெரிவித்தார். இந்தச் சிவலிங்கததைத் தரிசிக்க முஸ் லிம் அல்லாதாருக்கு வசதிகள் இருக்கவேண்டும். இந்திய சர்க்கார் சவூதி அரேபிய சர்க்காருடன் பேசி இதற்கு ஏற்பாடு செய்யுமா? என்று பரூவா கேட்டார்.

மெக்காவில் சிவலிங்கம் இருப்பதுபற்றிச் சர்க்காருக்குத் தகவல் இல்லை என்று கலாசார மந்திரி ஸ்ரீ ஹுமாயூன் கபிர் கூறினர்.

செய்தித்தாளில் வெளிவந்த இச்செய்தி தமிழகச் சைவ மக்களின் சிந்தைக்குத் தெளிவு பயக்கும் நற்செய்தி யென்பதிற் சிறிதும் ஐயமில்லை. திருநாவுக்கரசர் அருளிய அடைவு திருத் தாண்டகத்திற் போற்றப்பெறும் தேவார வைப்புத் தலங்களுள் 'மக்கீச்சுரம்' என்ற திருக்கோயில் மகமதிய சமயத்தாரின் புண்ணிய தலமாக மதித்துப் போற்றப்பெறும் மக்கா நக ரத்தில் அமைந்துளதென்பதும், அத்திருக்கோயிலில் எழுந் தருளிய மக்கிச்சுரப் பெருமானின் திருவுருவமாகிய சிவலிங்கம் இன்றும் அங்கு மாருது நிலைபெற்றுள தென்பதும், உலக நாடு களின் பண்பாடுகள் அனைத்தையும் தொன்மை வரலாற்றுடன்

ஒப்ப மதித்துப் போற்றிவரும் நம் பாரத அரசாங்கம், பாரத நாட்டின் பண்பாட்டிலும் சமயச் சார்பற்ற பொதுமை யுணர்விலும் மதிப்பும் நம்பிக்கையுமுடைய சவூதி அரேபிய அரசாங்கத்திற்குத் தனது வேண்டுகோளை முறைப்படி தெரிவித்தால் அவ்வரசாங்கம் அதற்கு இணங்கும் என்பதும், இந்திய அரசாங்கம் முயன்றால் மக்கா நகரத்திலுள்ள மக்கீச்சுரப் பெருமானை இந்திய நாட்டவரில் மகமதியரல்லாத ஏனையோரும் கண்டு மகிழ்ந்து வழிபடும் வாய்ப்பினைச் சவூதி அரேபிய அரசாங்கத்திடமிருந்து எளிதிற்பெற இயலும் என்பதும், தினமணியில் வெளிவந்த மேற்குறித்த செய்தியால் நன்கு பெறப்படும்.

இவ்வாறே இலண்டன்மா நகரத்திலுள்ள செயின்ட்பால் கதீட்டிரலில் (Cathedral) சிவலிங்கத் திருவுருவம் உளதென்பது, இலண்டன்மா நகரத்திலிருந்து வெளிவரும் Rajput என்ற மாதப் பத்திரிகையில் அதன் ஆசிரியரால் எழுதப்பெற்றுள்ளது. தென்னாட்டவர் வணங்கும் சிவலிங்கத் திருவுருவம் சைவரல்லாதார் பெருக வாழும் வேற்றுநாடுகளில் ஆங்காங்கே காணப்படும் தொன்மை வாய்ந்ததாதலைக் கூர்ந்து நோக்குங்கால் சிவலிங்க வழிபாடு சமயங்கடந்த நிலையில் அமைந்த தனிச் சிறப்புடையதென்பது இனிது விளங்கும்.


திருநாவுக்கரசர் தேவாரத்திற் போற்றப்பெறும் மக்கீச்சுரப் பெருமானை வணங்க விரும்புவோர்க்கு மக்கா நகரத்திற்குச் சென்று வழிபட்டுத் திரும்பவேண்டிய வாய்ப்பினைச் சவூதி அரேபிய அரசாங்கத்தின் இசைவுடன் அமைத்துத் தரும்படி இந்திய அரசாங்கத்தாரை வேண்டுவது சைவ நன்மக்கள் கடமையாகும்.

---

# மூன்றாம் திருமுறை

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

ஆலூர், ராஜகோபுரம் — கிழக்கு நோக்கிய சந்நிதி



இப்படம் உதவியவர்: K. இராமலிங்கம் அவர்கள்

நிர்வாக அதிகாரி, பசுபதீச்வரம் ஆலூர்.

# ஆவூர் பசுபதீச்வரம்

வித்துவான். திரு. பொன். முருகையன் அவர்கள்,
தமிழ்ப் பேராசிரியர் செந்தமிழ்க்கல்லூரி திருப்பனந்தாள்

மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொல சற்குருவும் வாய்க்கும் பராபரமே.

(தாயுமான சுவாமிகள்)

## தலமும் இருப்பிடமும்

சோழ நாட்டில் பாடல் பெற்ற தலங்கள் எத்துணையோ உள்ளன. அவற்றுள் காவிரிக்குத் தென்கரையில் உள்ள 127 தலங்களில் 21வது தலமாக எண்ணப்படுவது ஆவூர் பசுபதீச்வரம் என்னும் தலம். தஞ்சை மாவட்டம் பாபநாசம் தாலுகாவில் அமைந்துள்ளது. இதனைச்சுற்றியுள்ள தலங்கள் திருநல்லூர் பட்டீச்வரம், திருச்சத்திமுற்றம், திருக்கருகாவூர், திருஅவளிவணநல்லூர் முதலியன. காமதேனுப்பசு (ஆ) வழிபட்டு பேறு பெற்றதனுல் ஆவூர் என்ற பெயர் ஏற்பட்டது. இவ்வூருக்கு மணிகூடம் என்ற பெயரும் புராணத்தில் காணப்படுகிறது. தலவிருட்சம் வில்வமரம்.

## கோயில் அமைப்பு

கிழக்கு நோக்கி அமைந்த கோவில். முன்கோபுரம் (ராஜ கோபுரம்) 70 அடி உயரம் உடைய 5 மாடங்களையுடையது. பார்வைக்கு கம்பீரமான காட்சியளிக்கிறது. கோபுரத்தின் உச்சிக்குச் செல்லும் படிக்கட்டுகள் சிதைந்திருக்கின்றன. பொதுவாக திருப்பணி செய்தால் கோபுரத்திற்குச் சிறப்பு உண்டாகும் முன்கோபுரத்தையடுத்து கட்டுமலையாக அமைந்திருக்கும் நடு மண்டபம். இறைவன் இறைவி மூர்த்தங்கள் இந்த நடுமண்டபத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. கோச்செங்கட் சோழனுல் அமைக்கப்பட்ட மாடக்கோவில் எழுபதனுள் இவ்வூர் கோவிலும் ஒன்று.

### மூர்த்தி

இறைவன் திருப்பெயர் - பசுபதிநாதர். இறைவி திருப் பெயர்கள்-பங்கயவல்லி, மங்களவல்லி. முருகன் – வில்லேந்திய வண்ணம் காட்சியளிக்கிருர். கணபதி-நிருதி கணபதி. இறை வனுக்கு வழங்கும் பெயர்கள் – ஆவூருடையார், அசுவத்தவன நாதர், இக்கோயிலில் இரண்டு அம்மன் சந்நிதிகள் உண்டு. ஒன்று மங்களாம்பிகை சந்நிதி மற்ருென்று தசரதரால் வழிபாடு செய்யப் பெற்ற பங்கஜவல்லியின் சந்நிதி.

### தீர்த்தங்கள்

பிரம்மதீர்த்தம், காமதேனுதீர்த்தம், தாசிதீர்த்தம், உடை யார்தீர்த்தம், பொய்கை ஆறு, சூரியபுஷ்கரணி. இவற்றுள் பிரமதீர்த்தத்தில் நாடோறும் ஸ்நானம் செய்தவர் நன்மைபெறு வார்கள். இதற்கு குஷ்டரோக நிவாரண தீர்த்தம் என்ற பெயரும் உண்டு.

### தலப்பெருமைகள்

பிரமன், சப்தரிஷிகள், பூதகணங்கள், கின்னரர், கந்தருவர், இந்திரன், ஆதித்தன் வழிபட்டு நற்கதி அடைந்த தலம். காம தேனு வழிபட்ட சிறப்பினேயுடையது. தசரதச்சக்ரவர்த்தி வழி பட்டதலம். வசிட்டர் பாவம் நீங்கும் படியாகச் செய்த தலம். மாளவதேச மன்னன் தர்மத்துவஜனுக்கு குஷ்டரோகம் நீங்கப் பெற்றதலம் இது. ஞானசம்பந்தப் பெருமான் வழிபட்டு பதிக மும் பாடப்பெற்றதலம் இது. சங்ககாலப் புலவராகிய ஆவூர் மூலங்கிழாரைப் பெற்றதலம். இவ்வூரில் ஒரு கோட்டை இருந்த தாகவும், சோழன் நெடுங்கிள்ளி அதனுள் மறைந்திருந்ததாக வும் சங்க இலக்கியம் புறநானூறு பறைசாற்றுகிறது.

### ஞானசம்பந்தர் திருவாக்கு

பலதலங்களேயும் வழிபட்டு வந்தஞானக்குழந்தையாகிய ஞானசம்பந்தப் பெருமான் திருநல்லூரிலிருந்து இவ்வூருக்கு (ஆவூர்) வந்து இறைவனே வழிபட்டு பதிகம்பாடி மீண்டும் திரு நல்லூரை அடைந்ததாக பெரிய புராணத்தில் சேக்கிழார் அழகு பட விளக்குகிருர். அப்பாடல்கள் வருமாறு:-

பொங்கு காதலிற் போற்றி அங்கருளுடன் போந்து
பங்கயத் தடம்பணைப் பதிபலவும் முன்பணிந்தே
எங்கும் அன்பர்கள் ஏத்தொலி எடுக்க வந்தணைந்தார்
அங்கணர்க்கு இடம் ஆகிய பழம்பதி ஆவூர்.
பணியும் அப்பதிப் பசுபதீச்சரத் தினி திருந்த
மணியை உள்புக்கு வழிபடும் விருப்பினுல் வணங்கித்
தணிவில் காதலில் தண்டமிழ்மாலைகள் சாத்தி
அணி விளங்கிய திருநல்லூர் மீண்டும் வந்தணைந்தார்.

ஞானசம்பந்தரைத் தவிர வேறு எந்த நாயன்மாரும் இவ்வூருக்கு வந்ததாகக் கருத இடமில்லை.

ஞானசம்பந்தர் பாடிய பதிகம் 11 பாடல்களைக்கொண்டது. இவ்வூர்ப்பதிகத்தில் ஒரு புதிய மெருகு காணப்படுகிறது. ஆவூர்ப்பசுபதீச்வரத்தைப் பாடும் நாவே — என ஒவ்வொரு பாட்டின் கடைசி அடியும் அமைக்கப்பட்டிருப்பது நாக்கினுக்கு ஏற்றம் அளிக்கிறது. "நற்றவாவுனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சி வாயவே" என்ருற்போல பிறவிப்பயனைப் பெற்றதாக ஒவ்வொரு பாடலும் அமைக்கப்பட்டிருக்கிறது.

ஞானசம்பந்தப் பெருமாள் இவ்வூருக்கு வந்தபோது தான் கண்ட காட்சிகளாக சிலவற்றைக் குறிப்பிடுகிருர். இவ்வூரில் குரங்குகளின் தொல்லை அதிகமாக இருந்த தென்பதை தான் பாடிய பதிகத்தின் 7-வது பாடலில் குறிப்பிடுகிருர்.

தாறுடை வாழையில் கூழைமந்தி தகுகனியுண்டு உமிண்டிட்டு இனத்தைப்
பாறிடப் பாய்ந்து பயிலும் ஆவூர்ப் பசுபதீச்வரம் பாடும் நாவே.

மற்ருெரு காட்சி இவ்வூரில் இறைவனுக்கு தொண்டு புரியும் தேவரடியார்கள் நிறைய இருந்தனர் என்பதும் அவர்கள் நாட்டியத்தைப் பயின்றனர் என்பதும் காணப்படுகிறது.

கொந்தணையும் குழலார் விழவிற் கூட்டம் இடையிடை சேரும் வீதி—எனவும்,
சுற்றிய வாசலின் மாதர் விழாச் சொற்கவிபாட—எனவும்,
கோலவிழா வினங்கமேறிக் கொடியிடை மாதர்கள் மைந்தரோடும்—எனவும்,

ஞானசம்பந்தர் பாடிய பதிகத்தின் 5-வது, 6-வது 9-வது பாடல்களால் அறியக் கிடக்கின்றது.

## பழமையும் திருப்பணியும்

இக்கோவிலின் பழமையை அறுதியிட்டு அறிய முடிய வில்லை. எனினும் சோழன் திரிபுவனச் சக்கரவர்த்தி ராஜேந்திர சோழனுடைய ஆட்சியில் இக்கோவிலுக்கு நிலதானம் செய்யப் பட்டிருக்கிறது. எனவே சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன்னரே இக்கோவில் கட்டப்பெற்று சிறப்படைந்திருக்கிறது. அவனது கல்வெட்டு இவ்வூரை "நித்தா விநோத வளநாட்டு ஆவூர்"எனக் குறிப்பிடுகின்றது. இக்கல்வெட்டு கற்பக கிருஹத்தின் மேற்கு அடித்தளத்தில் காணப்படுகிறது. இக்கல்வெட்டு பூசநாளில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இக்கோயிலுக்கு கொடுக்கப்பட்ட நிலத்தின் அளவும் இடமும் குறிக்கப்பட்டிருக்கிறது. நிலத்தின் எல்லையாக புகழாபரணன் வாய்க்கால், இரட்டைக்குளம், இலுப்பைத் தோப்பு, மண்டலத் தோட்டம், நந்தவனம் முதலியன குறிப்பிடுகின்றன. கல்வெட்டு தோன்றி 1000 ஆண்டுகள் ஆகிவிட்டமையால் மேற்கண்ட எல்லைகள் யாதென அறிய முடியவில்லை.

இக்கல்வெட்டு கொடுக்கப்பட்ட காலத்தில் இக்கோயிலில் கணக்குவேலை பார்த்தவர்கள் கிரங்கு உடையான், நாய்க்க தேவன், பள்ளி யாழ்வான் ஆகியோர். இச்செய்தி அக்கல்வெட்டிலேயே காணப்படுகிறது. நாய்க்க வுடையான் என்பது அக்காலப் பட்டப்பெயர்கள்.

எனவே கோவில் பணியில் உடையான் நாய்க்கன் என்று கண்டிருப்பதால் இன்னும் இக்கோவில் திருப்பணியில் இத்தகை யோர் பெரிதும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

எனவே இத்தகைய கோவிலை சென்றேனும் கண்டேனும் திசை நோக்கியேனும் வழிபடல் சாலச்சிறந்தது. சிதைந்து கிடக்கும் இக்கோயில் கோபுரம், திருமதில் முதலியவற்றை திருப்பணி செய்தோர் இப்பிறப்பில் நன்மையும், மறுபிறப்பில் வீடுபேறும் அடைவர் என்பதை

(தொடர்ச்சி 394-ம் பக்கம் பார்க்க)

உ

திருச்செந்திலாண்டவன் துணை

## ஸ்ரீலஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள்
## 272-ம் ஆண்டு மகேசுவர பூசைத் திருநாள்
# புத்தக விற்பனை — விலைமலிவு அறிவிப்பு

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் கட்டளையிட்டருளிய வண்ணம் கீழே குறிக்கப்பெற்றுள்ள புத்தகப் பிரதிகள் நாளிது மே, ஜூன், ஜூலை ஆகிய மூன்று மாதங்களில் மட்டும், பாதி விலைக்கு விற்பனை செய்யப்பெறும். தபால் கட்டணம் வேறு.

(பிரதிக்கு)

| | புத்தக விபரம் | | தற்சமய விலை ரூ. நபை. | மலிவு விலை ரூ. ந.பை. | அஞ்சல் கட்டணம் ரூ. ந.பை. |
|---|---|---|---|---|---|
| 1. | கந்தர் கலிவெண்பா மூலமும் - உரையும் | — | 0 37 | 0 18 | 0 14 |
| 2. | திருக்கயிலைத் திருமுறை | — | 0 37 | 0 18 | 0 14 |
| 3. | திருக்கடவூர் திருமுறையும் பிரபந்தங்களும் | — | 0 19 | 0 10 | 0 08 |
| 4. | திருக்கடவூர் அபிராமிபட்டர் பிரபந்தம் | — | 0 31 | 0 15 | 0 08 |

கிடைக்குமிடங்கள்:— 1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோவில்,
ஸ்ரீவைகுண்டம்.

2. "தியாகராஜ விலாசம்"
53; பிள்ளையார்கோவில்த்தெரு
திருவட்டீஸ்வரன் பேட்டை, திருவல்லிக்கேணி
சென்னை - 5

குறிப்பு: புத்தகப் பிரதிக்குரிய தொகையை தபால் ஸ்டாம்பாக அனுப்பி வைத்தாலும் புத்தக அஞ்சல் மூலம் பிரதிகள் அனுப்பி வைக்கப் பெறும்.

# வேண்டுதல்

திரு. ஜெ. புவனேசுவரி அவர்கள்,
சோமாசு நிலையம், வள்ளீஸ்வரன் தோட்டம் சென்னை–28

மண்ணிலே பிறந்து வளரும் மாந்தர் தொகை எண்ணிலடங்கா. பிறக்கும் போதே அவர்களுடன் இன்ப, துன்பங்களும் சேர்ந்து வருகிறது. அகங்கார மென்கிற அலைகள் மோதுகிறது. ஆசையாகிய கொடிகள் சுற்றுகிறது. பந்தங்கள் ஆகிற போதை அமுக்கிறது. துன்பம் தலைதூக்கும்போது, அதனைப் போக்கி ஆறுதலடைய மனிதன் இறைவனையே துணையென நினைந்து வேண்டுகிறான். வேண்டும் வரங்களைக் கேட்கிறான். மனதைச் சமநிலையில் வைக்க முற்படுகிறான். பல்வேறு உள்ளம் ஆண்டவனைப் பல்வேறு விதமாக வணங்கி வேண்டுகிறது.

அக இருளைப் போக்கி, அறிவொளி விசும் 'கல்வியிலே' தேர்ந்து நிற்க வேண்டும் என்று கற்கும் பாலகர் வேண்டுவர். தந்தையோ தரணியில் செல்வந்தராய் மகன் தலைசிறந்து நிற்க வேண்டும் என்று வேண்டுவர்.

இறைவனுக்கும், மனிதனுக்கும் உள்ள சம்பந்தம் காந்தத்துக்கும் இரும்புக்கும் உள்ளது போன்றாகும். துருபிடித்த இரும்பைக் காந்தம் ஆகர்ஷிக்காது. அதுபோல் மாய வாழ்வில் சிக்கி வாழும் மாந்தரும் இறைவனைச் சேரார். அசுத்த இரும்

---

(முன் 392-ம் பக்கத் தொடர்ச்சி)

மாதவர் மடங்களாதி வரதன் மந்திரங்களாதி
நாதமாம் இலிங்கமாதி நவின புட்கரணியாதி
சேதமுற்றிடின் முன்போல் செய்பவர்க்கு உறுபலன்தான்
ஓதுமுன் செய்தோர் தம்மில் ஆயிரம் குணித மோங்கும்.

(சிவபுண்ணியத்தெளிவு)

என்ற பாடலால் அறியலாம்.

பைச் சுத்தமாக்கினுல் காந்தம் இழுக்கும். அது போல் மனிதன் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலத்தைக் கட்டியொழித்தால், இறைவனின் மலர்ச் சேவடியை அடையலாம்.

உலகையளித்தான், உடலளித்தான் உயர்பிறவியுள்ளம் உவந்தளித்தான். அப்பிறவி உறுபயனைக் காண அடியார் அலைந்தனர். பலகலைகள் கற்ருலும் பன்னெறி சேர்ந்தாலும் பற்றை நீக்க வேண்டினர். எத்தனையோ பிழைகளை அனுதினம் செய்கிருேம். அத்தனையும் பொறுத்தாள அவனிதனில் 'அவனின்றி' வேறு ஒன்று உண்டோ! சிற்றின்பம் விரும்பாத அடியார் சன்மார்க்கம் காணத்தலைப்பட்டனர்; உலகமெலாந் தொழுதேத்தும் 'அவனை' அலகில்லா உயிர்க்குயிராய் அமர்ந்து நிற்கும் 'அவனை' ஹரிநாம, சிவ நாமத்தால் போற்றவேண்டும் என்று விழைந்து முயன்றனர். அவர்கள் வினையும் ஒத்தது. முக்தியும் அடைந்தனர்.

பிணக்கிலாதபெ ருந்து றைப் பெரு
மானுன் ஞமங்கள் பேசுவார்க்
கிணக்கி லாததோ ரின்ப மேவருந்
துன்ப மேதுடைத் தெம்பிரான்
உணக்கி லாததோர் வித்து மேல்வினை
யாம லென்வினை யொத்தபின்
கணக்கி லாதத் திருக்கோலம் நீவந்து
காட்டினுய் கழுகுக் குன்றிலே. —மாணிக்கவாசகர்.

சார்ந்தாரைத் தகைந்தாளவல்ல சிவனுடைய நாமத்தை அப்பர் துணையெனப் பிடித்தார். இப்பிரபஞ்சமே இருண்டாலும் உயிரே மாண்டாலும் நற்றுணையாக 'நமச்சிவாயத்தை'ப் பிடித்துக் கொண்டார். தன்னைப் பிறர் துன்புறுத்திளுலும் இன்பத்தை அணைக்கவும் லட்சியத்தைக் கைவிடவும் அவர் விரும்பவில்லை. பிறப் பெருங்கடலின் தோணியாகிய அந்தச் சிவ நாமத்தை வேண்டுகிருர்.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடிப் பொருந்த கைதொழ
கற்றுணை பூட்டியோர் கடலில் பாய்ச்சியினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே, —அப்பர்

புழுவாய் பிறந்தாலும் இவ்வையகத்தே இறைவனடியே நிலைத்து இருக்க ஆன்ேறோர் வேண்டினர். மலையெனச் செல்வம் வந்தாலும், இதைவிட இந்திரலோகமே வந்தாலும் பழியை விரும்பால் பண்பாயிருக்கவே வேண்டினர்.

செல்வத்திலோ அன்றித் தரத்திலோ ஏற்றந் தாழ்வு இருந் தாலும் சுடுகாட்டில் அனைவரும்ஒன்ருகவே உள்ளனர். அவர்கள் அப்படிச் செல்லும் போது ஏந்திப் போவது பாபமோ, அன்றி புண் ணியமோதான்.

அத்தமும் வாழ்வும் அகத்துமட்டே விழியெம்பொழிக
மெத்திய மாதரும் வீதி மட்டே
கைத்தல மேல்வைத்து அழும் மைந்தரும் சுடுகாடுமட்டே
பற்றி வருவது பாப புண்ணியமே

என்றுக் கூறினர் ஆன்ேறோர்.

வாழும் காலத்திலாவது தான் அடைந்த செல்வத்தைப் பிறருக்கு அளித்துப் புகழுடன் வாழவேண்டும். படைத்த வனுடைய புகழைப் பாட வேண்டும்.

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதிய மில்லை உயிர்க்கு —திருவள்ளுவர்.

ஆவியோ நிலையின்றிக் கலங்கியது, இரத்த வெள்ளத்திலே மிதக்கிருன். எதிரியின் அம்பு அவன் நெஞ்சைப் பிளக்கிறது. திடகாத்திரமும், மன உரமும் கொண்ட அம்மானிட உடல் போர்க் களத்தில் ஊசலாடியது, இந்திரனுக்குக் கவசக் குண்ட லத்தை அளித்த கர்ணன் தன் புண்ணிய மனைத்தும் இப்போது கண்ணனிடம் சமர்ப்பித்தான். கருணை வடிவான கண்ணன் மனம் கசிந்து, அப்பனே! நீ வேண்டும் வரம் எதுவோ? அதை நவில்வாய் என்ருன் தன் மதுர வாயைத் திறந்து. இச் சமுதாயத்தில் அவன் அரசாள விரும்பவில்லை. உடல் நலம் நிலைக்கக் கவனம் காட்டவில்லை. இறைவனே பக்கத்திலிருந் தாலும் அவன் நிலைகலங்கவில்லை. கேட்டான் கிடைத்தற்கரிய வரத்தை; பெற்ருன் பேரின்பக் களிப்போடு.

மல்லலந் தொடைய னிருபனை முனிவன்
மகிழ்ந்து நீ வேண்டிய வரங்கள்
சொல்லுக வுனக்குத் தருதுமென்றுரைப்பச்
சூரன்மா தலையுஞ் சொல்வா
னல்லல் வெவ் வினையா லின்னமுற்பவமுண்
டாயினும் மேலெழு பிறப்பு
மில்லையென் றிரப்போர்க் கில்லையென்றுரையா
விதய நீ யளித்தரு ளென்றான்

—வில்லிபுத்தூர் ஆழ்வார்.

மனிதன் பொய்யாகிய கூட்டைத் தாங்கி வாழ்ந்தாலும் ஆத்ம சுத்தி அடைய பல பாக்களைப் புனைய மனம் விழை கிறான். பக்தி ரசம் ததும்பப் பாக்களைக் கோர்க்க இறைவ னிடம் வேண்டுவான். தெளிவுறவே மாந்தர் அறிந்திடவும், தெளிவுறவே மொழிந்திடவும் ஒளிர் வளரும் தமிழ் வாணியை வேண்டுவர். கல்வி பயின்ற பயனைக் கவிதையிலே காட்ட வேண்டுவர்.

ஒரு சமயம் குமரகுருபர அடிகள் காசி நோக்கிச் சென்றார். பாஷை தெரியாத காரணத்தில் பலர் ஏறெடுத்துப் பார்க்க வில்லை. அடியார்க்கு அடியவனான 'பரம்பொருள்' அவரைத் தவிக்க விடுவாரா? கணத்தில் சிறந்த சிந்தனையை அவர் மனதில் போதித்தார். கவலைபூத்த அவரின் பளிங்கு அறை யிலே சகலகலாவல்லியை நோக்கிக் கவிதை மலர் உதிர்ந்தது. வேண்டினார் கலைமகளை.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனு மென் பால்
கூட்டும் படிநின் கடைக்கண் நல்
காய்; உளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத் தமிழ்த் தீம்பால்
அமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள் ளோதிமப் பேடே!
சகல கலா வல்லியே

—குமரகுருபரர்.

தமிழிலே புதுக்கலைகள் தவழ்ந்திலங்கி, மன்னன் மனம் விறுபெறக் கசிந்து உருகினர் சரசுவதியை நோக்கி. பெற்றூர் உருது பாஷை. பகர்ந்தார் அறிவினுக்கினிய சொற்களை.

எப்பொருளிலும் உண்மை காண ஆவலுற வேண்ட வேண்டும். அறிவுக்குகந்த வரங்களை வேண்ட வேண்டும். நல்வழியை அடைந்து, முக்தி பாதையை அணுக முயற்சிக்க வேண்டும். கலியுக உலகிலே கண்கண்ட தெய்வங்களைக் கண்ணுல் தரிசித்துக், காலால் வலம் செய்து, பண்ணுல் உருகிப் பாவத்தைப் போக்க முயலவேண்டும்.

அன்பே தகளியாக ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியாக நன்புருகி
ஞானச் சுடர் விளக் கேற்றினேன் நாரணற்கு —பூதத்தாழ்வார்.

தேனை வண்டு மறவாதது போல, மேகத்தைப் பயிர் மறவாததுபோல தமிழ்க் கவிதைகளையும் தமிழ் நாடு மறவாது. அதை ஆக்கிய ஆன்றோரது புகழும் அத்திரு நாட்டிலிருந்து மறையாது. தமிழின் உறுப்புக்கள் இயல், இசை, நாடகம் அல்லவா ? செங்கல் இருந்தால்தானே செம்மையுடன் ‘வீடு’ அமைக்க இயலும். நம் முன்னோர்கள் சங்க காலத்திலிருந்தே கவி இயற்றுவதில் வல்லவராயிருந்தனர். தன் உயிரெனத் தமிழினைச் சீராட்டித் தாலாட்டி வளர்த்தனர். அதனை வானுற ஓங்கி நிற்கச் செய்ய முனைந்தனர். ஊக்கமும் உணர்வூட்டும் முயற்சியும் திருவினையாக்கும். கணநாதனைக் கண்ணுல் கண்ட ஔவைப்பிராட்டி மாற்றுப் பொருளை மனமார அள்ளிக் கொடுத்து அவரிடம் பிறிதொரு பொருளை வேண்டுகிருள்.

நிலமிசை நீடுவாழ, அன்பரின் அகமாகிய மலரில் வீற்றிருக்கும் ‘செம்பொருளின்’ செம்மை திருவடிகளை இடைவிடாமல் வேண்டுதல் வேண்டும். அப்பொழுது தான் பிறவிப் பெருங் கடல் நீந்த இயலும். விருப்பு, வெறுப்பற்ற கடவுளின் கழல் நினைந்து உருகுபவர்க்கு யாண்டும், எவ்விடத்தும் இன்னல் கிடையாது. சீரிய முயற்சிகள் சிறந்தோங்க அம்பலவாணனை இடைவிடாது வணங்குவோமாக !

காஞ்சி ஏகாம்பரநாதர் ஆலயத்தில் 'சிவ சிவ ஒலி மண்டபத்'

# திறப்பு விழா

காஞ்சீபுரம், ஸ்ரீ ஏகாம்பரநாதர் ஆலயத்தில், 25-2-60 அன்று திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து அதிபர் **ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்** அவர்களால் அமைக்கப் பெற்ற 'சிவ சிவ' ஒலி மண்டபத்'தை சென்னை அறநிலைய பாது காப்புக் கமிஷனர் **திரு. ஏ. உத்தண்டராமபிள்ளை** யவர்கள் திறந்து வைத்தார்கள்.

விழா துவங்குவதற்கு முன்பாக சுமார் 2 மணி நேரம் தேவார இசைக் கச்சேரி நடைபெற்றது. திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து தேவாரக் கட்டளை ஓதுவார்கள் (காஞ்சீபுரம்) தேவாரபூஷணம் கோ. சாரங்கபாணி செட்டியார் அவர்களும் தில்லை ஓதுவார் திரு. கனகசபைப் பிள்ளை அவர்களும் பக்க வாத்தியங்களுடன் இசைக் கச்சேரி செய்தார்கள்.

இறை வணக்கத்திற்குப் பிறகு, சென்னை திருவல்லிக்கேணி 'தியாகராஜ விலாசம்' திரு. க. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் ஸ்ரீ காசி மடத்தின் சார்பாக அனைவரையும் வரவேற்றுப் பேசிய தின் சுருக்கம்:- சிவராத்திரியாகிய இப்புண்ணிய நாளில் இவ் விழா நடைபெறுவது மிகவும் பொருத்தமானதென்றும், 'சிவ சிவ' என்னும் சின்னங்களை எங்கு நாம் பார்த்தாலும் அப் போதெல்லாம் ஸ்ரீ காசி மடத்தின் நினைவே நமக்கெல்லாம் வருகிறதென்றும், 'சிவ சிவ' நாமத்தை தமிழ் நாட்டில் மட்டு மல்லாமல் இந்தியா முழுவதிலும் பரவச் செய்த ஒரு புண்ணிய வான் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர் என்றும் சுமார் அரை கோடி ரூபாய்ச் செலவில் 286 தருமங்களுக்கு மேல் நடைபெறத் திட்டம் வகுத்து, இன்னும் நாள்தோறும் சிறந்த அறப்பணிக ளெல்லாம் செய்து வருகிறார்கள் என்றும், அவர்களுக்கு நாம் என்றென்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம் என்றும், ராவ் பகதூர் தணிகைமணி அவர்கள் பாடியிருக்கும் பிரகாரம் நமது சுவாமிகள் அவர்கள் நாயன்மார் காலத்தில் இருந்திருப்பாரானால், அவரை 64வது நாயன்மாராகச் சேர்த்

திருப்பார்கள்' என்றும், விரிவுரை யாற்றினர்கள். அத்தகைய சிறந்த பெரியார் ஸ்ரீ ஏகாம்பரநாதர் ஆலயத்தில் 1955ம் ஆண்டிலிருந்து தேவாரம், திருவாசகம் முதலிய தெய்வப் பனுவல்கள் ஒலிபெருக்கியின் மூலம் நாள் தோறும் ஓதுவதற்குத் திட்டம் வகுத்து இவ்வாலயத்தில் இயங்கிவரச் செய்திருக் கிருர்கள் என்றும், அப்பணி இன்னும் சிறப்பாக நடைபெறு வதன் பொருட்டு இங்கு சிவ சிவ ஒலி மண்டபம் ஒன்றை இப்போது அமைத்திருக்கிருர்கள் என்றும் கூறினர்.

சிவ சிவ ஒலி மண்டபத் திறப்பாளராகவும், விழாத் தலைவ ராகவும். அமைந்துள்ள அற நிலையப் பாதுகாப்புக் கமிஷனர் அவர்கள் இப்பதவியில் இருப்பது நாம் செய்த புண்ணியத்தின் பயன் என்றும், அவர் நிரம்பிய உள்ளம் படைத்தவர் என்றும், அவர் கமிஷனர் பதவி வகிக்க ஆரம்பித்ததிலிருந்து ஒவ்வொரு விஷயத்திலும் மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டு நல்ல முறையில் இயக்குவிக்கிருர்கள் என்றும், அரசாங்கத்தின் வாயிலாக இத்தகைய அரிய தொண்டர் இப்பதவிக்குக் கிடைத் திருப்பது நம் நாட்டின் முன்னேற்றத்திற்குச் சிறந்த அறிகுறி யாகும் என்றும், இந்து அறநிலையக் காரியாலயத்திற்கென புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் புதிய கட்டிடம் எழிலுற அமைந் திருப்பதற்குக் காரணம் நமது கமிஷனர் அவர்களே என்றும், 'திருக்கோயில்' என்னும் பத்திரிகையைத் துவக்கி அரசாங்க வெளியீடாக வர திட்டம் வகுத்ததும் இக்கமிஷனரே என்றும் விரிவுரையாற்றினர்.

திரு. க. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் விழா சிறப்புற நடைபெறுவதற்கு அனுப்பியிருந்த ஆசிச் செய்திகளைப் படித்தார்.

பின்னர், அறநிலையப் பாதுகாப்புக் கமிஷனர் திரு. ஏ. உத்தண்டராமப் பிள்ளை அவர்கள் தலைமையுரை நிகழ்த்திக் கொண்டிருக்கையில் இறைவனும் இறைவியும் உலாச் செல்லப் புறப்பட்டுவந்து விழாப்பந்தலில் கூடியிருந்தவர்களுக்குக் காட்சி தந்தது இறைவன் திருவருள் எதிர்பாராமல் கிடைக்கக்கூடியது என்பதை மெய்ப்பிப்பதாகும் என்பதையும் அது இவ்விழாவை

இறைவன் வாழ்த்துவதுபோலமைந்த நிகழ்ச்சியாகும் என்றும், சிவ சிவ ஒலி மண்டபத்தை அமைத்தருளிச் செய்தவர் எவ்வளவு அருள் உடையவர் என்பதைக் காட்டுவது இறைவன் எழுந்தருளிக் காட்சிதந்த நிகழ்ச்சி என்றும் உருக்கமாகக் குறிப்பிட்டார்.

இறைவன் ஓசை ஒலியாகவும், தேச விளக்காகவும், வாச மலராகவும், இப்படியாக உலகத்தில் உள்ள எல்லாம் அவனுகவே இருக்கிறுன் என்றும்; எல்லாவற்றையும் இறைவன் திருவருளாகக் காணவேண்டுமென்றும், நாம் பார்க்கின்ற ஒவ்வொன்றிலும் பரிபூரணனேக் காணவேண்டும் என்றும், அந்த நிலேயில்தான் நாம் கேட்கின்ற ஒலிகளெல்லாம் இறைவனுடைய சிவ சிவ ஒலியாகவே இருக்கவேண்டும்; பார்க்கும் இடமெல்லாம் சிவ சிவ ஒளியாக இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் எங்கு பார்த்தாலும் திருமுறை ஒலிக்கும்படியாகவும், சிவ சிவ ஒளி பிரகாசிக்கும் படியாகவும் அமைத்துக்கொண்டு வருகிறுர்கள் என்றும் குறிப்பிட்டு; எங்கு சிவ சிவ ஒளி இருந்தாலும், அது திருப்பனந்தாள் மடத்தார் தான் வைத்திருப்பார்கள் என்று நினேக்கும் அளவுக்கு சுவாமிகள் அவர்கள் 'சிவ சிவ'த்தைப் பரப்பியிருக்கிறுர்கள் என்றும், ஸ்ரீ காசிமடத்துத் தலேவர் கையெழுத்திடுவது கூட 'சிவ சிவ' என்றுல், அன்னுருடையது எவ்வளவு பண்பட்ட உள்ளம் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள்.

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் திருமுறைகளிலே பற்றும் புலமையும் மிக்கவராக இருப்பதோடு, அவைகளே ஓதியும் தாம் கேட்டிருப்பதாக தலேவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எப்படி மடாதிபதிகள் நடந்துகொள்ள வேண்டும், எப்படி அவர்கள் மடங்களே நிர்வகித்து வரவேண்டும் என்பதை உலகுக்குக் காட்டிக்கொண்டிருக்கிறவர்கள் காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்களும் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலேவர் அவர்களும் ஆவார்கள் என்று கமிஷனர் அவர்கள் தெரிவித்தார்கள்.

அரை கோடி ருபாய்க்குமேல் ஸ்ரீ காசி மடத்துத் தலேவர் அவர்கள் பேரறக் கட்டளேகள் நிறுவியிருக்கிறுர்கள் என்றும்,

அவர்களுடைய உள்ளம் மிக உயர்ந்தது என்றும், மிகவும் பண்பட்டது என்றும், அன்னூர் லட்சம் லட்சமாகச் செலவு செய்வதோடுகூட லட்சியத்திற்காகவே செலவிடுகிறார்கள் என்றும், அதுபோன்றுதான் சிவ சிவ ஒலி மண்டபங்களைப் பல இடங்களில் வைத்து வருகிறார்கள் என்றும், இறைவன் எண்ணம் எப்பொழுதும் எண்ணத்திற்கு வரவேண்டுமென்று அவர் செய்துவருகிற பணிகள் கணக்கில் அடங்கா என்றும் குறிப்பிட்டார்கள்.

காஞ்சிபுரத்தை நினைத்த மாத்திரத்திலே சுந்தரமூர்த்தி சுவாமிகள் நினைவு வருவதாகவும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது இடக்கண்ணைப் பெற்ற தலம் இக்காஞ்சிமாநகரம் என்றும், வலக்கண்ணைப் பெற்ற தலம் திருவாரூர் என்றும், காஞ்சியும் திருவாரூரும் இரு கண்களைப் போன்ற தலங்கள் என்றும் குறிப்பிட்டு, சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவன் பணிக்காகவே திருமணம் செய்துகொண்டார்கள் என்றும், இறைவன் பணி நடைபெறுவதற்கு உதவியாக இருக்கும் பொருட்டு மணம் செய்துகொண்ட நாச்சியார்கள் வேண்டிய பொருளுக்காகவே இறைவனை அவ்வப்போது பொன்னும் பொருளும் வேண்டிப் பெற்றார் என்றும், இப்படியாக சுந்தரர் வரலாற்றையும், அன்னையின் அருளால் சுந்தரர் கண்களைப் பெற்ற வரலாற்றையும் விரிவாக எடுத்துரைத்து சுந்தரர் தம் பதிகத்திலே "கண் அடியேன் பெற்றவாறே" என்று பாடியிருக்கிறார் என்றும், குறிப்பிட்டார். மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை ஆகிய இம்மூவாசையும் "சுந்தரருக்கு உண்டு என்றால்; இறைவன் பணிக்காகவே அவ்வாசைகள் அவருக்கு உண்டாயிற்றேயல்லாது தனக்காக அவற்றை விரும்பவில்லையென்றும், அது பற்றிய வரலாற்றை தலைவர் அவர்கள் எடுத்துரைத்தார்.

தேவாரத்தினால் ஆகாதது ஒன்றும் இல்லை என்பதை நிதரிசனமாகக் காட்டும் வண்ணம் இவ்விழாவில் நம் கண் முன்னால் 91 வயது நிரம்பிய பெரியார் காட்சியளித்துக் கொண்டிருக்கிறார் என்றும், அவர் 84வது வயதிலே கீழே விழுந்ததன் காரணமாக வலது கால் முழங்காலுக்குக் கீழேயும் இடுப்பிலும் எலும்பு ஒடிந்து விட்டது என்றும்; அதைப் பெரிய

பெரிய மருத்துவர்களும் குணப்படுத்த முடியவில்லையென்றும், கடைசியில் தேவாரப் பதிகங்கள் பாடி, இறைவனிடம் முறையிட்டு, கதறிக் கதறி, தீராத நோயிலிருந்து இறைவன் திருவருளால் விடுபட்டார் என்றும், அவரை நாம் இன்று நம் கண்முன்னே கண்டுகொண்டிருக்கிறோம் என்றும் மெய் சிலிர்க்கும் வண்ணம் எடுத்துரைத்தார். இறைவனுடைய திருவருள் நமக்குப் பலவகையிலே வருகின்றது என்றும்; அதிலும் காசிவாசி சுவாமிகள் அவர்கள் இத்தகைய ஒலி மண்டபங்களைப் பல இடங்களிலே வைத்து, திருமுறை ஒலிக்கும் படியாகச் செய்திருக்கிறார்கள் என்றும், அதை நாமெல்லாம் நன்றாக பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று தாம் கேட்டுக்கொள்வதாகவும், அதுதான் நாம் சுவாமிகள் அவர்களுக்குச் செய்கின்ற கைம்மாறாகும் என்றும் ஞாபகப்படுத்தினார்.

இவ்வாலயத்தில் திருமுறை ஓதுவதற்காக ஸ்ரீ காசிமடத்துத் தேவாரக் கட்டளை ஓதுவாராக நியமிக்கப்பட்டிருக்கும் தேவார பூஷணம் கோ. சாரங்கபாணி செட்டியார் அவர்கள் அனுபவம் உள்ளவர்கள் என்றும், அவரைக்கொண்டே இப்பணி நடைபெற வேண்டுமென்பது சுவாமிகள் அவர்களின் திருவுள்ளம் என்றும், அவரை நன்கு பயன்படுத்திக்கொள்ளவேண்டியது காஞ்சி மக்களின் கடமை என்றும், குறிப்பிட்டுவிட்டு, சிவ சிவ ஒலி மண்டபத்தை, அதிர் வேட்டு முழங்க, திறந்து வைத்தார். அப்பொழுது தீபாராதனை நடைபெற்றது.

மண்டபம் திறந்துவைக்கப்பட்டதற்குப் பிறகு, ஓதுவா மூர்த்திகள் இருவரும் மாறி, மாறியும், சேர்ந்தும் 'முந்தைகாள், பாயுமால்விடை, எள்கவின்றி, படமாக, அற்புதத்தெய்வந்த... மன்னுகதில்லை, எண்ணில் ஆகமம், நெஞ்சம், சென்றகாலத்தின்' என்று துவங்கும் பதிகங்களை, தலைவரவர்கள் அடியெடுத்துக் கொடுக்க, பாடினார்கள்.

பின்னர், சிவநெறிச் செல்வர் திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி பிரின்சிபால் வித்துவான் கே. எம். வேங்கடராமையா, எம். ஏ., பி. ஓ. எல். அவர்கள் "காஞ்சியும் திருமுறையும்" என்னும் பொருள்பற்றி அரியதொரு சொற்பொழிவு நிகழ்த்தி

ளுர்கள். காஞ்சிமாநகரத்தின் பண்டைப் பெருமையையும், அக் காலத்திய தமிழ் வேந்தர்கள் திருமுறைகளிலே தோய்ந்த வரலாற்றையும், பல்லவ அரசர் சிவலிங்கத்தையே தன் முடியிலே தரித்து சைவத்தை வளர்த்தார் என்றும், கைலாசநாதர் கோயிலைக் கட்டிய வரலாற்றையும், திருமுறையிலே வருகின்ற சொற்றொடர்களையே குழந்தைகளுக்குப் பெயராகச் சூட்டி அக் காலத்திய மக்கள் திருமுறையில் தோய்ந்தார்கள் என்றும், அவ்வழியில் நாம் திருமுறையிலே தோய்ந்து உய்வதற்கு ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் செய்துவருகிற சைவப் பணிகளைப் பயன்படுத்திக்கொள்ள காஞ்சி மக்கள் தவறமாட்டார்கள் என்று நம்புவதாகவும் தலைவர் அவர்கள் சைவத்துக்கும் வைணவத்துக்கும் செய்து வருகிற அரிய சேவைகளை வெகுவாகக் குறிப்பிட்டார்.

ஸ்ரீ ஏகாம்பரநாதர் தேவஸ்தான ட்ரஸ்டி திரு. ஏ. சுப்ரமண்ய அய்யர் தேவஸ்தானத்தின் சார்பாக நன்றி கூறினர்.

25—2—60 இன்று காலை ஸ்ரீ ஏகாம்பரநாதருக்குப் புனுகு மெய்ப்பூச்சும் விசேட ஆராதனையும் ஸ்ரீ காசிமடத்துச் சார்பில் நடைபெற்றது குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

---

1135-ம் ஞ பங்குனி, சித்திரை மாதங்களில்

# கலைக்கோவிலில் வரப்பெற்றுக்கொண்ட புத்தகங்களின் விபரம். (தொடர்ச்சி)

| தொடர் எண் | புத்தகத்தின் பெயர் | ஆசிரியரின் பெயர் |
|---|---|---|
| 7293 & 94 | திருமந்திரக் கட்டுரை முதல் தந்திரம் - (2 Copies) | திருவாவடுதுறை ஆதீன வெளியீடு |
| 7295 & 96 | திருமூலர் திருமந்திரம் மூன்றும் தந்திரம் (பஞ்சாக்ஷர தீபம் என்னும் உரையுடன்) | |
| 7297 to 7300 | கயிலைபாதி காளத்திபாதித் திருவந்தாதி (உரையுடன் (4 Copies) | |
| 7301 | சீகாழிச் சிற்றம்பல நாடிகள்-கலித்துறை முதலியன) | |
| 7302 | இரட்டையர் பிரபந்தங்கள்-ஆராய்ச்சிகளுடன் | |
| 7303 | கவிராக்ஷஸ - ஸ்ரீ கச்சியப்ப முனிவர் பிரபந்தங்கள் (முதற்பகுதி) | |
| 7304 to 7305 | கவிராக்ஷஸ-ஸ்ரீ கச்சியப்ப முனிவர் பிரபந்தங்கள்-இரண்டாம் பகுதி- (2 Copies) | |
| 7306 & 7307 | துகளறு போதம்-2 Copies பொழிப்புரையுடன் | |

7308 மெய்கண்ட சாத்திரம் போற்றிப்பஃறொடை முதலியன பழையஉரையுடன்

7309 & 10 போற்றிப்பஃறொடை-ஏற்புக்கட்டுரை-(2 Copies)

7311 & 12 மெய்கண்டசாத்திரம்-இருபா-இருபது

7313 திருவுந்தியார்-தெளிவுக்கட்டுரை

7314 ஸ்ரீ நமச்சிவாயமூர்த்தி ஆற்றுப்படை (மூலமும்-குறிப்புரையும்)

7315 திருத்தொண்டர்மாலை (கதைக் குறிப்புகளுடன்)

7316 மெய்கண்டசாத்திரம்-சிவஞானசித்தியார் - பரபக்கம் மூலமும் உரையும்

7317 மெய்கண்ட சாத்திரம்-சிவஞானபோதம் ஸ்ரீ பாண்டிப் பெருமாள் விருத்தியும் தெளிபொருள் விளக்கமும்

7318 திருஞானசம்பந்தர் பிள்ளைத் தமிழ்

7319 to 21 திருஞானசம்பந்தர் பிள்ளைத் தமிழ் ஆராய்ச்சிக் குறிப்பு (3 Copies)

7322 to 25 மெய்கண்டசாத்திரம்-முதற்பகுதி திருவுந்தியார் (மூலமும் உரையும்) 4 Copies

7326 to 28 மெய்கண்ட சாத்திரம்-இரண்டாம் பகுதி - திருக்களிற்றுப்படியார் (மூலமும் உரையும்) 3 Copies

7329 திருவருட்பயன்-தெரிவுக் கட்டுரை

7330 to 31 மெய்கண்ட சாத்திரம் திருவருட்பயன் முதலியன பழையவுரை (2 பிரதிகள்)

7332 துறைசைச் சுப்பிரமணிய தேசிகர் மும்மணிக் கோவை

7333 ஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் நினைவு மலர்

7334 சிவஞானபோதம்-மூலம்

7335 சமயம்

7336 பாரததாற்பரிய சங்கிரகம்-உரையுடன்

7337 & 38 திருப்பள்ளியெழுச்சி (தஞ்சை ந. கந்தசாமிபிள்ளை எழுதிய எளிய உரையுடன்) 2 பிரதிகள்

7339 திருமந்திர மாநாட்டு மலர்-1954

7340 இரண்டாவது திருமந்திர மாநாட்டு மலர்

7341 to 42 ஆறுவது திருமந்திர மாநாட்டு மலர் 2 பிரதிகள்

7343 to 46 தணிகைப் புராணம் (குறிப்பு உரையுடன்) - 4 பிரதிகள்

7347 சிவபூசைத்திரட்டு

7348 திருவாவடுதுறை ஆதீன வரலாறு

7349 திருவாதவூரர் சிவபோத வாழ்க்கை

7350 to 52 சதாசிவரூபம்-பழையவுரையுடன் (3 பிரதிகள்)

7353 சிவஞானபோதமும்-பன்னிரு திருமுறையும்

7354 to 57 சிவஞானபோதம்-மூலம் சிற்றுரையும் (4 பிரதிகள்)

திருவாவடுதுறை ஆதீன வெளியீடு

7358 & 59 முத்தமிழ் முழக்கம் (2 பிரதிகள்)

7360 திருஅருட்பாத்திரட்டு

7361 to 65 கிளி விடு தூது (5 பிரதிகள்)

7366 திருக்குற்றாலத் திருப்பதிகங்கள்

7367 & 68 சிதம்பரம்-(பதிகங்களுடன்)

7369 மெய்கண்ட சாத்திரம் (சித்தாந்த சாத்திரம்)

7370 திருக்கருப்பறியலூர்த் தலபுராண சுருக்கம்

7371 இந்து மதபால பாடம்

7372 சித்தாந்த சைவ வினாவிடை

7373 25-வது மகாசந்நிதானம் 6-வது ஆண்டு ஆட்சி அறிக்கை 1950 – 51 பசலி 1360

7374 ஷை 7-வது ஆண்டு ஆட்சி அறிக்கை 1951–52 பசலி 1361

7375 & 7376 8-வது ,, ,, 1952-53 பசலி 1362 (2 copies)

7377 தருமபுர ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டறிக்கைகள் 1953–54

7377 (a) 7379 தருமபுர ஆதீன கல்வி நிலையங்களின் ஆண்டு அறிக்கைகள் 1955-56

7380 ஆதீனப்பல்கலைக் கல்லூரி ஆண்டு அறிக்கை-(1952-53)

7381 to 82 தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார ஆண்டறிக்கை 1953-54 (2 பிரதிகள்)



(தொடரும்)

உ

## திருப்பனந்தாள் - ஸ்ரீ காசி மடம்

# ‘ திருமுறை வெளியீடுகள் ’

| | ரூ. ந. பை |
|---|---|
| விநாயகர் திருமுறை ... | 0 06 |
| ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் ... | 6 00 |
| சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம் ... | 3 00 |
| திருஞானசம்பந்தர் தேவாரம் (மூலம்மட்டும்) ... | 2 50 |
| திருநாவுக்கரசர் தேவாரம் ,, ... | 2 25 |
| சுந்தரர் தேவாரம் (புதிய பதிப்பு) ,, ... | 1 30 |
| திருவாசகம் (புதிய பதிப்பு) ,, ... | 0 50 |
| திருக்கோவையார்-பேராசிரியர் உரையும் பழையவுரையும் (புதிய பதிப்பு) ... | 2 90 |
| ஒன்பதாம் திருமுறை-திருவிசைப்பா திருப்பல்லாண்டு (மூலம்மட்டும்) ... | 0 56 |
| திருமந்திரம் ,, ... | 2 50 |
| பதினோராந்திருமுறை ,, ... | 1 25 |
| அம்மையார் அற்புதத் திருவந்தாதி (புதிய பதிப்பு) ... | 0 25 |
| திருக்கைலாயஞானவுலா - உரையுடன் ... | 0 50 |
| பெரிய புராணம் (மூலம்மட்டும்) ... | 2 50 |
| அகத்தியர் தேவாரத்திரட்டு ... | 0 37 |
| திருவிளையாடற் புராணம் (மூலம்மட்டும்) ... | 3 00 |
| தாயுமான சுவாமிகள் பாடல்-குறிப்புரையுடன் ... | 1 25 |
| கந்தபுராணச் சுருக்கம் (மூலம்மட்டும்) ... | 1 75 |
| கந்தபுராணம் – முதல் மூன்று காண்டங்கள் ,, ... | 2 75 |
| ,, யுத்த தேவகாண்டம் ,, ... | 2 00 |
| ,, தக்ஷகாண்டம் ,, ... | 1 50 |
| கந்தபுராண வசனம் அச்சில் | |
| கந்தர் அலங்காரம் - குறிப்புரையுடன் ... | 0 25 |
| கந்தரநுபூதி ... | 0 13 |
| கந்தர் கலிவெண்பா – ஆங்கிலம் ஹிந்தி மொழி பெயர்ப்புக்களுடன் ... | 0 37 |
| கந்தர் கலிவெண்பா - மூலம் மட்டும் ... | 0 06 |
| கந்தர் கலிவெண்பா - மூலமும் – உரையும் ... | 0 37 |
| நீதிநெறி விளக்கம்-ஆங்கிலம் ஹிந்தியும் கூடியது ... | 0 50 |
| சகலகலாவல்லிமாலை – ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது ... | 0 06 |
| சிவஞான சித்தியார், ஹிந்தி மட்டும் ... | 1 00 |
| திருக்குறள் - அறத்துப்பால் மூலம் குறிப்புரையும் ஹிந்தி மொழி பெயர்ப்பும் ... | 1 50 |
| திருக்குறள் – பொருட்பால் ,, ... | 2 50 |
| திருக்குறள் – காமத்துப்பால் ,, ... | 1 00 |
| இல. 31, 32, 33 திருக்குறள் 3 புத்தகமும் ... | 4 00 |

Registered With the Registrar of Newspapers for India
Under No R: No 1485 57.

Regd No. M. 5574 

| | | |
|---|---|---|
| 34 | திருக்குறள் முலமும் குறிப்புரையும் ... | 0 |
| 35 | திருக்குறள் - பொருட்பால் பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம் ... | 0 |
| 36 | முதுமொழி மேல் வைப்பு (குறிப்புரையுடன்) ... | 0 |
| 37 | திருவுசாத்தானக் கல்லெழுத்துக்கள் ... | 0 |
| 38 | திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா - மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் - மதுரைக் கலம்பகம் - நீதிநெறி விளக்கம் - மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணி மாலை- மதுரை மீனாட்சியம்மை குறம் ... | 2 |
| 39 | திருவாரூர் நான்மணிமாலை – முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் ... | 1 |
| 40 | சிதம்பர மும்மணிக்கோவை - சிதம்பரச் செய்யுட்கோவை- தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை ... | 1 |
| 41 | பண்டார மும்மணிக் கோவை – காசிக் கலம்பகம் – சகலகலாவல்லி மாலை ... | 1 |
| 42 | சிதம்பரச் செய்யுட்கோவை ... | 0 |
| 43 | முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் [அச்சில்] | |
| 44 | தமிழிசைப்பாக்கள் [அச்சில்] | |
| 45 | பெரியபுராணம் – உரைநடை ... | 2 |
| 46 | திருவிளையாடற் புராணம் – உரைநடை ... | 2 |
| 47 | குமரகுருபர சுவாமிகள் ஜீவிய சரித்திரப்பட விளக்கங்களும் கந்தர்கலிவெண்பா விளக்கப்படங்களும் ... | 0 |
| 48 | அபிராமி பட்டர் பிரபந்தம் (முலம்மட்டும்) ... | 0 |
| 49 | திருக்கயிலைத் திருமுறை ... | 0 |
| 50 | திருக்கடவூர்த் திருமுறையும் பிரபந்தங்களும் ... | 0 |
| 51 | செந்திலாண்டவன் மகிமை ... | 0 |
| 52 | திருக்குறள் - உரைக்கொத்து - அறத்துப்பால் 3-ம் பதிப்பு ... | 1 |
| 53 | ஷை ஷை பொருட்பால் ... | 2 |
| 54 | ஷை ஷை காமத்துப்பால் ... | 1 |

மேலேகண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்.
2. ஸ்ரீ K. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்,
"தியாகராஜ விலாசம்" 53, பிள்ளையார் கோவில்தெரு,
திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை - 5.

குறிப்பு:- * இக்குறியிடப் பெற்றவற்றின் விற்பனைத் தொகை ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற பன்னிரு முறைப்பதிப்பு நிதியைச்சாரும். மற்ற நூல்களில் திருக்கு உரைக்கொத்து (எண் 52, 53, 54) தவிர்த்து எஞ்சியவற் விற்பனைத்தொகை 'குமரகுருபரன்' பத்திரிகையைச்சாரு

அச்சிட்டது:— குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம் – '60.